Registered as a Newspaper

# உதயன்

புதன்பொய்கை

சுடர் : 41
கதிர் : 154

புதன்கிழமை
29 ஏப்ரல் 2026

சித்திரை 16 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் –16
விலை – ரூபா 50

வடக்கில்
**95 பேருக்கு அரச நியமனம்**
விரிவு பக்கம்:- 05

## திஸ்ஸ விகாரையில் குவிந்திருந்த பிக்குகள்

யாழ்ப்பாணம், ஏப். 29
திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் நேற்று அளவீடு செய்யப்படவிருந்த நிலையில், குருந்தூர்மலைப் பிக்கு உட்பட பல பிக்குகள் நேற்று திஸ்ஸ விகாரையில் குவிந்தனர்.
கடந்த தடவை இடம்பெறவிருந்த அளவீட்டுப் பணி »15



தையிட்டிக் காணிகளில்

# அளவீட்டு நடவடிக்கைகள் மீண்டும் கைவிடப்பட்டன!

**யாழ்ப்பாணம், ஏப்ரல் 29**
**தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை அளவீடு செய்யும் பணிகள் நேற்று நடைபெறவிருந்த நிலையில், நீண்ட குழப்பங்களுக்குப் பின்னர் அந்தப் பணிகள் அனைத்தும் கைவிடப்பட்டன.** »15

தமிழர் உரிமைக்கு

## இசையால் உரமுட்டிய தேனிசை செல்லப்பா மறைவு!



சென்னை, ஏப். 29
ஈழத்தமிழர்களிடத்தில் விடுதலைக் கனலை மூட்டிய புரட்சிப் பாடகர் தேனிசை செல்லப்பா (வயது–85) நேற்றுச்செவ்வாய்க்கிழமை காலை உடல்நலக் குறைவு காரணமாகத் தமிழ்நாட்டில் காலமானார்.
தமிழகம் திருநெல்வேலி மாவட்டம் சிங்கிலிப்பட்டிக்கிராமத்தில்1941ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி பிறந்த தேனிசை »15

## செம்மணிப் புதைகுழியில் தொடர்கின்றது அகழ்வு!

யாழ்ப்பாணம், ஏப். 29
யாழ்ப்பாணம் செம்மணிப் புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளின் இரண்டாம் நாள் அகழ்வு நடவடிக்கைகள் நேற்று இடம்பெற்றன.
செம்மணிப் புதைகுழியில் மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியிருந்தன. இதைத் தொடர்ந்தே மூன்றாம் கட்டத்தின் இரண் »15

நாகர்கோவில்

## நாச்சிமார் ஆலயத்திலிருந்து வெளியேறியது இராணுவம்!

யாழ்ப்பாணம், ஏப். 29
யாழ்ப்பாணம் – வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதியில் அமைந்துள்ள நாச்சிமார் ஆலய வளாகத்தில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அங்கிருந்து வெளியேறியுள்ள »15

## போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் கைது!



யாழ்ப்பாணம், ஏப். 29
சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சூராவத்தைப் பகுதியில் போதை மாத்திரைகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். »15

## ரயிலுடன் மோதி முதியவர் சாவு!

வவுனியாவில் சோகம்

வவுனியா, ஏப். 29
வவுனியா – தோணிக்கல் பகுதியில், ரயில் கடவையைக் கடக்க முற்பட்ட முதியவர் ரயிலுடன் மோதுண்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.
யாழ்ப்பாணத் »15

அல்லைப்பிட்டியில்

## சிறுவர் ஆற்றல் மையம் தீயில் எரிந்து அழிந்தது



யாழ்ப்பாணம், ஏப். 29
யாழ்ப்பாணம் – அல்லைப்பிட்டிப் பகுதியில் இயங்கிவரும் தபோவனம் சிறுவர் ஆற்றல் மையம் நேற்றுச் »15

முச்சந்தி முரளி




காணாமலாக்கப்பட்ட லலித், குகன் வழக்கு

## கோத்தாபயவின் சாட்சியம்; ஜூன் மாதமே கட்டளை!

யாழ்ப்பாணம், ஏப். 29
காணாமல் ஆக்கப்பட்ட லலித் மற்றும் குகன் ஆகியோர் தொடர்பான வழக்கில், கோத்தாபய ராஜபக்சவின் சாட்சியத்தை எத்தகைய முறையில் பெறுவது என்பது தொடர்பான கட்டளை ஜூன் மாதம் வழங்கப்படும் என்று நீதிமன்றம் அறிவித்துள்ளது.
இந்த வழக்கின் கட்டளை நேற்று வழங்கப்படவிருந்தது. எனினும், கட்டளை ஜூன் »15

மன்னாரில் பகல் பொழுதில்

## போத்தலில் அடைக்கப்பட்ட கள் விற்பனைக்குத் தடை!

மன்னார், ஏப். 29
மன்னார் நகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில், பகற்பொழுதில் போத்தலில் அடைக்கப்பட்ட கள் விற்பனைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
உள்ளூர் கள் உற்பத்தியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அவர்களின் வாழ்வாதா »15

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 28.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4415 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 26 33 65 69 |
| விசேட எழுத்து | G |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 28.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1482 |
| வெற்றி இலக்கினம் | துலாம் |
| வெற்றி இலக்கங்கள் | 13 15 44 55 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 28.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0441 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 4 4 9 9 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 28.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2521 |
| ஆங்கில எழுத்து | Y |
| சுப்பர் இலக்கம் | 07 |
| வெற்றி இலக்கங்கள் | 05 08 62 76 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 28.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6173 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 6 6 6 1 5 3 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 28.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2203 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 03 55 68 75 |
| விசேட எழுத்து | M |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 28.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0289 |
| வெற்றி இலக்கினம் | கன்னி |
| வெற்றி இலக்கங்கள் | 07 09 67 |

# மன்னாரில் இந்தமுறை 2,450 ஏக்கரில் சிறுபோகம்

## கட்டுக்கரைக் குளத்தின் நீர் விநியோகம் ஆரம்பம்

**மன்னார், ஏப்.29**

**மன்னார் மாவட்டத்தில் இம்முறை 2,450 ஏக்கரில் சிறுபோகச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ள நிலையில் கட்டுக்கரைக் குளத்தின்கீழ் சிறுபோகப் பயிர்செய்கைக்குரிய நீர் விநியோகம் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டது. நீர்ப்பாசனப் பணிப்பாளர் தா. திருவருட்செல்வன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.**

இந்த வருடம் மன்னார் மாவட்டத்தில் சிறுபோகத்துக்காக 2,450 ஏக்கர் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. சிறுபோகம் 6 பிரதான வாய்க்கால்களின்கீழ் உள்ள 43 குளப்பகுதிகளில் மேற்கொள்ளப்படவுள்ளது. கட்டுக்கரைக் குளத்தின் நீர் மட்டமானது 11 அடி 7 அங்குலமாகக் காணப்படுகிறது. தற்போது 2 அங்குல நீர் வான் பாய்கிறது. குளத்தின் தற்போதைய கொள்ளளவு 30,982 ஏக்கர் அடியாகும். இந்த முறை சிறுபோகச் செய்கைக்குத் தேவையான நீர் போதுமான அளவில் காணப்படுகின்றது. விவசாயிகளின் வேண்டுகோளுக்கு இணங்க, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குளங்களைப் புனரமைப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்ட அளவில் நீர் விநியோகம் செய்வதற்கு தீர்மானிக்கபட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-56)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 28.04.2026 | செவ்வாய்க்கிழமை | 0881 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| U | 0 0 2 7 8 3 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 28.04.2026 | செவ்வாய்க்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 3147 | P | 21 54 59 75 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 28.04.2026 | செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| U | 20 34 53 56 | 5308 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | தினம் |
| 28.04.2026 | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0977 | 14 23 47 |

| லக்ன ராசி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 28.04.2026 | செவ்வாய்க்கிழமை | |
| மிதுனம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 22 35 41 48 | 4859 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 28.04.2026 | செவ்வாய்க்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| Q | 01 | 12 15 42 55 | 2323 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 28.04.2026 | செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| O | 11 17 25 28 | 2973 |

## அரச காணியில் தனிநபர் அடாத்து உடனடியாக வெளியேறப் பணிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.29

குடத்தனையில் சட்டவிரோதமாக அபகரித்த அரச காணியிலிருந்து, குறித்த நபரை ஒரு மாதத்துக்குள் வெளியேறுமாறு வடமராட்சிக் கிழக்குப் பிரதேச செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர் நாடொன்றில் வசிக்கும் இந்த நபர், குடத்தனைப் பகுதியில் அரச காணியைத் தனது சொந்தக்காணி என உரிமைகோரி, எல்லை மதில் அமைத்துச் சட்டவிரோதக் கட்டுமானங்களை மேற்கொண்டுள்ளார். இதுதொடர்பில் அவதானித்த ஊர் மக்கள் மற்றும் பொது அமைப்பினர் பல்வேறு போராட்டங்களையும், எதிர்ப்பு நடவடிக்கைகளையும் முன்னெடுத்தனர். தொடர்ந்து பருத்தித்துறைப் பிரதேச சபையால் குறித்த கட்டடத்துக்கு எதிராகச் சிவப்பு எச்சரிக்கைக் கடிதமும் ஒட்டப்பட்டது. இருப்பினும், சட்டத்தை மதிக்காத குறித்த நபர், அந்த அறிவித்தலைக் கிழித்தெறிந்து சர்ச்சையை ஏற்படுத்தினார். அதையடுத்து வடமராட்சிக் கிழக்குப் பிரதேச செயலர் உஷா சுபலிங்கம் சட்டத்தின் பிரகாரம் நேரடி நடவடிக்கையில் இறங்கியுள்ளார். இந்த நபர் அரச காணியில் அதிகாரமில்லாமல் தங்கியிருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. எனவே இன்னும் ஒரு மாதத்துக்குள் காணியிலிருந்து அவரும், அவரைச் சார்ந்தோரும் முழுமையாக வெளியேற வேண்டும். குறித்த காணியை எவ்வித ஆக்கிரமிப்புமின்றி வெறுமையாக, தகுதி வாய்ந்த அதிகாரியான பிரதேச செயலரிடமோ அல்லது கிராம அலுவலர், குடியேற்ற உத்தியோகத்தர் ஆகியோரிடமோ ஒப்படைக்க வேண்டும் என்று குறிப்பிட்டு அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளது. (க-66)

## சிறுமி துஷ்பிரயோகம் இளைஞர் கைது!

மட்டக்களப்பு, ஏப்.29

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 15 வயதுடைய சிறுமி ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளாகிய குற்றச்சாட்டில் 22 வயதுடைய இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். சிறுமியின் தந்தையால் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்த மேலதிக சட்டநடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)



## தமிழகக் கடற்பரப்பில் யாழ்.நபர் சிறைப்பிடிப்பு

சென்னை, ஏப்.29

தமிழ்நாடு ஆற்காட்டுத்துறைக்கு அப்பால் கடலில் மீன்பிடி வலைகளைத் திருட முயன்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம், பலாலி பகுதியை சேர்ந்த நபரொருவர் தமிழக மீனவர்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

தமிழகத்தின் செருதூரிலிருந்து சென்ற 5 தமிழக மீனவர்கள் ஆற்காட்டுத்துறைக்குத் தென்கிழக்கே மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது அங்கு அதிவேகப் படகில் வந்த மூன்று நபர்கள், தமிழக மீனவர்களின் வலைகளை அறுத்துச் செல்ல முயன்றுள்ளனர். அதை அவதானித்த மீனவர்கள் அவர்களைப் பிடிக்க முற்பட்டபோது, இருவர் தப்பிச் சென்ற நிலையில் அதில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இந்த நபர் மட்டும் சிக்கிக்கொண்டார் என்று கூறப்படுகின்றது. பிடிபட்ட நபர் மீனவர்களால் தாக்கப்பட்ட நிலையில் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பாக வழக்குப் பதிவு செய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-100)

## எரிபொருள் மானியத்துக்காக மீனவர்களின் விவரம் திரட்டல்

மன்னார், ஏப்.29

மத்திய கிழக்கில் ஏற்பட்ட அசாதாரண நிலைமையை கருத்தில் கொண்டு, மீனவர்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படவுள்ள, எரிபொருள் மானியத்துக்கு மீனவர்களின் விவரங்கள் திரட்டப்படவுள்ளன. தொடர்ச்சியாக 3 மாதங்களுக்கு வழங்கப்படவுள்ள இந்த மானியத்துக்கு, மீனவர்கள் படிவம் ஒன்றைப் பூர்த்தி செய்து தங்கள் பகுதி சங்கங்களுக்கு ஊடாக, மீன்பிடித் திணைக்களத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்று மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அத்துடன் தேசிய அடையாள அட்டைப் பிரதி, படகுப் புத்தகத்தின் பிரதிகள், தொழிலுக்கான பாஸ்பிரதி, வங்கிப் புத்தகப்பிரதி, வங்கிப் புத்தகம் நடைமுறையில் இருக்கி [illegible] டுத்தப்பட்ட கடிதம் ஆகியவற்றை மீனவசங்கங்களில் ஒப்படைக்கப்பட வேண்டும். எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் படிவங்களை நிரப்பி மீனவர்கள் திணைக்களத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளனர். (க-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் இலங்கையர்களும் வாக்களிப்பதற்கு வாய்ப்பு!

கொழும்பு, ஏப்.29

**வெளிநாடுகளில் வசிக்கும் சுமார் 15 இலட்சத்துக்கும் அதிகமான இலங்கையர்களுக்கு தேர்தல்களில் வாக்களிப்பதற்கான வாய்ப்பை வழங்கும் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை, பொது நிர்வாகம், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்று பொது நிர்வாகம், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.**

வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கான வாக்குரிமையை உறுதிப்படுத்தும் வகையில் நியமிக்கப்பட்ட விசேட குழுவின் இறுதி அறிக்கையே இவ்வாறு கையளிக்கப்பட்டது.

குழுவின் தலைவர், முன்னாள் தேர்தல் ஆணையாளர் சட்டத்தரணி எல். ஏ. பி. கே. குலரத்ன தலைமையிலான இந்தக் குழு, வாக்காளர்களை நான்கு பிரதான பிரிவுகளாக அடையாளப்படுத்தியுள்ளது.

வெளிநாட்டுத் தொழிலாளர்கள், மாணவர்கள், இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் மற்றும் ஏனைய காரணங்களுக்காக வெளிநாடு சென்றவர்கள் என நான்கு பிரிவினர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்தச் செயற்பாட்டை 4 பிரதான துறைகளின் கீழ் நடைமுறைப்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது.

அதாவது வாக்காளர் பதிவு, வெளிநாட்டுத் தொழிலாளர்கள், மாணவர்கள் மற்றும் இரட்டைக் குடியுரிமை பெற்றவர்களை முறையாகப் பதிவு செய்யும் நடைமுறைகள், தேர்தல் பிரசாரம், வெளிநாடுகளில் உள்ள வாக்காளர்களுக்காகப் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்தல் மற்றும் தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் தாக்கம், வாக்களித்தல், தூதரகங்கள் ஊடாக, தபால் மூலம் அல்லது பாதுகாப்பான இணையவழி முறைகளைப் பயன்படுத்தி வாக்களிப்பதற்கான சாத்தியக்கூறுகள், வாக்குகளை எண்ணுதல் மற்றும் முடிவுகளை வெளியிடுதல் ஆகியனவாகும்.

90ஆம் ஆண்டுகளில் இருந்து வந்த இந்த நீண்டகாலக் கோரிக்கைக்கு, 2025 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நியமிக்கப்பட்ட இந்தக் குழு மூன்று மாதங்களுக்குள் அனைத்து தரப்பினரினதும் கருத்துக்களை உள்வாங்கி இந்த அறிக்கையைத் தயாரித்துள்ளது என்று குழுவின் தலைவர், முன்னாள் தேர்தல் ஆணையாளர் சட்டத்தரணி எல். ஏ. பி. கே. குலரத்ன குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## பாடசாலை பஸ் விபத்து 34 மாணவர்கள் காயம்!

கொழும்பு, ஏப்.29

பொகவந்தலாவ நகரில் உள்ள பாடசாலை ஒன்றுக்கு மாணவர்களை ஏற்றிச் சென்ற பேருந்து நேற்றுக் காலை விபத்துக்குள்ளானதில் 34 மாணவர்கள் பொகவந்தலாவ பிராந்திய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்தில் காயமடைந்த 10 மாணவர்கள் மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். பொகவந்தலாவ பொலிஸார் விபத்துத் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

## போதைப்பொருள் வியாபாரம் தாய், மகள் கைது!

கொழும்பு,ஏப்.29

களுத்துறை மில்லனிய பகுதியில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட தாயும் மகளும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று மில்லனிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மில்லனிய நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பெண்ணை பொலிஸ் அதிகாரிகள் வழிமறித்து சோதனையிட்டபோது 15 பொதிகளில் போதைப்பொருளும் போதைப்பொருள் விற்பனை மூலம் கிடைத்ததாக சந்தேகிக்கப்படும் ரூபா 51 ஆயிரத்து 570 பணமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையின் அடிப்படையில் அவரது வீட்டில் சோதனை நடத்த முற்பட்டபோது அதிகாரிகளைக் கண்டதும் பெண்ணின் தாய் தப்பிச் செல்ல முயன்றபோது மடக்கிப் பிடிக்கப்பட்டார். அவரிடமிருந்தும் 2,220 மில்லி கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## மின்னல் தாக்கியதில் இரு விவசாயிகள் பலி



அநுராதபுரம், ஏப்.29

அநுராதபுரம், விஜிதபுர பகுதியில் மின்னல் தாக்கத்துக்கு இலக்காகி இரண்டு விவசாயிகள் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். உயிரிழந்தவர்கள் 49 மற்றும் 50 வயதுடையவர்களாவர். இவர்கள் தமது வயல் நிலங்களில் வேலை செய்து கொண்டிருந்த போதே மின்னல் தாக்கத்துக்கு இலக்காகியுள்ளனர் என்று தெரியவந்துள்ளது. சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ச-இ)

## மின்வேலியில் சிக்கி ஒருவர் உயிரிழப்பு!

திருகோணமலை, ஏப்.29

திருகோணமலை மொரவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், சட்டவிரோத மின்சார வேலியில் சிக்கி நபரொருவர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை உயிரிழந்துள்ளார்.

தனது பயிர்நிலத்தை வன விலங்குகளிடமிருந்து பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த சட்டவிரோத மின்சாரக் கம்பியில் தவறுதலாக சிக்கியதிலேயே அவர் உயிரிழந்துள்ளார் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மொரவெவ பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-இ)




## கண்ணால் காண்பதும்....!

ஆடின காலும் பாடின வாயும் மட்டுமில்லை களவெடுத்த கையும் சும்மாயிருக்காது. அப்பிடி சும்மாயிருக்காமல் தெரியாத இடங்களிலையும் சொறிய வெளிக்கிட்டால் கையும் மெய்யுமா மாட்டுப்பட வேண்டியும் வந்திடும். அப்பிடி ஒருத்தர் தான் இப்ப இந்திய மீனவர்மாரிட்ட சிக்குப்பட்டிருக்கிறார். நேற்று சோசியல் மீடியா முழுக்க ஒரு வீடியோ ஓடித்திரிஞ்சது. எங்கட யாழ்ப்பாண மீனவர் ஒருத்தரை இந்திய மீனவர்மார் பிடிச்சு, அடிச்சு, முகமெல்லாம் வீங்கி, கை காலைக் கட்டிக் கொண்டு போய் அவையின்ர நாட்டுப் பொலிஸிட்ட ஒப்படைச்சிருக் கினம். இந்த வீடியோவைப் பார்த்திட்டு 'இப்பிடி முகமெல்லாம் வீங்கிற அளவு அடிச்சிருக்கிறாங்களே அவங்களுக்கு மனச் சாட்சியே இல்லையா' எண்டு பேஸ்புக்கில இருக்கிறவைக்கு மனிதாபிமானம் பொத்துக்கொண்டு வந்து பொங்கித் தாளிச்சவை. உண் மையில அது மனிதாபிமானம் இல்லாத செயல்தான். ஆடுமாடு மாதிரி ஒரு மனிசனை இப்பிடி இம்மை மறுமையில்லாமல் அடிச்சு உதைச்சு, கையையும் காலையும் கட்டிக்கொண்டு போறது எல்லாம் ஈவிரக்கமில்லாதவை செய்யிற வேலைதான். ஆனால் நடந்த சம்பவத்தைக் கேட்டால், இஞ்சை இருக்கிறவையே அவ ரை அப்பிடிக் கையைக் காலை கட்டித்தான் அடிப்பினம்.

முந்தநாள் பிடிபட்ட அந்த மீனவர் உண்மையான முகத்தை அறிஞ்சீங்கள் எண்டால் அதிர்ந்துபோவீங்கள். அவருக்கும் அவரின்ர சுவட்டாளிமாருக்கும் முழுநேர வேலையே கள்ளமீன் பிடிக்கிறது தான். கள்ளமண் ஏத்துறதைக் கேள்விப்பட்டிருப்பியள். அதென்ன கள்ளமீன்பிடி? வேற ஒண்டுமில்லை, வேற மீனவர்மார் கடலுக்க பாய்ஞ்சிட்டு வாற வலையளில சிக்கிற மீனை, இந்தக் குரூப் வேளைக்கே போய் எடுத்துக்கொண்டந்திடும். சரி, மீனைப் பிடிச்சதோட வந்தாலும் பரவாயில்லை. வலையளையும் அறுத்தெடுத்துக் கொண்டந்திடுவினம். பிறகு அந்த வலையை தூர இடத்தில இருக்கிற வேற ஆக்களுக்கு வித்திடுவினம். இப்பிடி தாங்கள் பிடிக்கிற மீனையும், வாழ்வாதாரமா இருக்கிற வலையளையும் அறுத்துக்கொண்டு போனவை இவைதான் எண்டு மற்ற மீனவர்களுக்குத் தெரியும். ஆனாலும் ஆதாரம் இல்லாததால ஒண்டும் செய்யேலாதே. சிலவேளையளில அப்பிடி வலை அறுக்கேக்க பிடிபட்டு,எங்கட மீனவர்களிட்டையும், உந்தக் கும்பல் பிடிபட்டிருக்காம். அவையொண்டும் நிதானமா இருக்கேக்க இப்பிடிக் களவுக்குப் போறேலை. ஏதும் கஞ்சா கிஞ்சா குடிச்சு வெறிச்சாத்தான் திடீர் உசார் வந்து களவில துணிஞ்சு இறங்குவினமாம்.

ஊருக்குள்ள இவையின்ர கள்ளம் வெட்ட வெளிச்சமானதால, இவையள் படகெடுத்துக்கொண்டு வெளிக்கிட்டாலே மீன் பிடிக்கிற மற்றாக்களுக்கு 'இந்தக் குரூப் வெளிக்கிட்டுட்டுது கவனமா இருங்கோ' எண்டு போனில மெசெஜ் பறக்கும். இப்பிடி எல்லாரும் அலேர்ட்டா இருந்ததால உள்ளூரில இவையின்ர பருப்பு அவியாமல் போக வெளிகிட்டுது. அதால இவையள் ரூட்டை மாத்தி 'எல்லை தாண்டிய' களவில இறங்கியிருக்கினம். இஞ்சத்தை மீன்பிடிக்கிற ஆக்கள் பாவிக்கிற வலையை விட இந்திய மீனவர்மார் பாவிக்கிற வலை தரமும் விலையும் கூட.அதால அங்கத்தை வலையளை அறுத்துக்கொண்டு, அதுக்க சிக்குப்பட்டிருக்கிற மீனையும் அள்ளிக்கொண்டு வாறதுதான் இந்தக் கும்பலின்ர வாடிக்கையா இருந்தது. ஆனால் இவையின்ர கெட்டகாலம், முந்தநாள் இவையள் இந்தியக் கடலுக்க இறங்கி வலையளை அறுத்து எடுத்துக்கொண்டு வரேக்க, இந்திய மீன்பிடிகாரர் கண் டிட்டினம். அவை படகில வந்து தன்மையா 'மரியாதையா எங்கட வலையளை அறுக்காமல் விட்டிட்டு போங்கோ' எண்டு கெஞ்சல் தொனியில எச்சரிச்சிருக்கினம். ஆனால் இவையள் நல்ல புகை மயக்கத்தில இருந்ததால், 'தங்களை ஆரும் ஒண்டும் செய்யேலாது' எண்டு நினைச்சு இந்திய வள்ளதுக்க பாய்ஞ்சு, அவைக்கு அடிச்சு, அவை வைச்சிருந்த சாமான்களையும் எடுத்துக் கொண்டுவர வெளிக்கிடிருக்கினம். ஆனால் அந்தப் படகில இருந்த இந்திய மீன்பிடிகார ஆக்களும் நல்லதிடகாத்திரமானவை. அதால பதிலடி பலமா விழ, ஒராள் அவையிட்ட சிக்குப்பட மற்றவை அவரை விட்டிட்டு தப்பினோம்பிழைச்சோம் எண்டு ஓடிட்டினம். ரண்டு பகுதிக்கும் கைகலப்பு நடக்கேக்கதான் உவருக்கு முகத்தில முறையான சாத்துப்படியாம். ஆளைப் பிடிச்ச பிறகு அடிக்காமல் பொலிஸிட்ட கொண்டந்து குடுத்திருக்கினம். அப்பிடி அடிக்க நினைச்சவை ஆளை அப்பிடியே கடலுக்க போட்டிட்டு வந்திருக்கலாமெல்லோ. பாவம் எண்டுதான் காப்பாத்திக் கரைக்கு கொண்டந்தவை எண்டு இந்திய மீனவர் தரப்பு சொல்லுது. அவையிட்ட பிடிபட்டவர் ஊரில ஆயிரம் வலையறுத்த அபூர்வ சிகாமணி எண்டு உள்ளூர் மீனவரும் சொல்லுகினம். அதால எதையும் மேலோட்டமாப் பார்த்திட்டு கருத்துக் கந்தசாமியளா மாறமுதல் எதையும் தீரவிசாரிச்சு அறியிறது நல்லம் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பிரதோச விரதம்

யாழ்ப்பாணம், ஏப்.29

வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயப் பிரதோச விரத உற்சவம் இன்று புதன்கிழமை மாலை இடம்பெறவுள்ளது. மாலை 4 மணியளவில் அபிஷேகம் ஆரம்பமாகித் தொடர்ந்து விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறும். வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து நகுலேஸ்வரப் பெருமான் தேவி சமேதரராக உள்வீதி எழுந்தருளி உலா வருவார் என ஆலய ஆதீன கர்த்தா சிவஸ்ரீ ந. ரங்கநாதக் குருக்கள் தெரிவித்துள்ளார். (ச-66)

# தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், ஏப்.29

மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் ஆலய மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா இன்று புதன்கிழமை காலை வசந்த மண்டபப் பூசையுடன் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

நாளை தீர்த்தத் திருவிழா இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும்

**திருமதி அனுலா ராகுலன்**

அவர்களின் அன்புத் தாய்

**செல்வராசா புவனேஸ்வரி**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தாதிய நலன்புரிச் சங்கம்**
**போதனா வைத்தியசாலை**
**யாழ்ப்பாணம்.**

(CS 31700) A

## மரண அறிவித்தல்



தோற்றம் 12 . 12 . 1936 — மறைவு 27 . 04 . 2026

### திருமதி தவமணி நவரத்தினம்

ஏழாலை மேற்கு சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. தவமணி நவரத்தினம் அவர்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தவில் வித்துவான் செல்லப்பா சின்னப்பிள்ளை தம்பதியரின் மூத்த புதல்வியும், அல்வாய் பழனிப்பதியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பழனி சின்னக்குட்டி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நவரத்தினம் (சோதிடர்) அவர்களின் அன்பு மனைவியும், அன்னரத்தினம், காலஞ்சென்ற ராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சரஸ்வதி, காலஞ்சென்றவர்களான கையலங்கிரிநாதன், இராசதுரை, சபாரத்தினம், நல்லம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற உஷா மற்றும் லதா, மாலா, உமா, ஹேமா, நவராஜா, ஆகியோரின் பாசமிகு தாயாரும், கலாநிதி, இன்பவடிவேல் (பவுணன்), கதிர்காமநாதன், ஆனந்தராஜா, மதுரா ஆகியோரின் அன்பு மாமியாரும், பாலச்சந்திரன், ஜீவா ஆகியோரின் பெரிய தாயாரும், சுதா, சுஜா, துஷாரா, நிரோஷா, நிரூஷன், நிவேதா, துவாரகா, கிருஷாந், துஷாரகா, அஜித்தா, சுஜீவன், சுஜிந்தா, நிஷாரா, நிஜானா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை மறுதினம் (01.05.2026) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் தொந்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**கி.கதிர்காமநாதன் (மருமகன்)**
**076 5786 410**

(CS 31703) A

# நூல் வெளியீடு

நவாலியூர் வை.நல்லையா உரை எழுதிய கந்தபுராணம் 2 ஆவது காண்டம் நூல் வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு காரைநகர் கருங்காலி போசுட்டி முருகமூர்த்தி ஆலயத்தில் நடைபெறவுள்ளது என்று சைவப்பிரகாசப் பேரவையின் செயலாளர் வேலுப்பிள்ளை சிவகுருநாதன் தெரிவித்துள்ளார். (ச-இ)

## வீடு வாடகைக்கு தேவை

சிறிய அரசாங்க உத்தியோகத்தருக்கு நல்லூர், திருநெல்வேலி, கல்வியங்காடு, கொக்குவில், கோண்டாவில், இணுவில், கட்டப்பிராய், இருபாலை, கோப்பாய் ஆகிய பகுதிகளில் வீடு அல்லது அனெக்ஸ் வீடு வாடகைக்கு தேவை.

**தொடர்பு: 077 6894 358**

(CS 31704) A


## மணப்பெண் தேவை

1. நல்லூர், இந்து, 1991, திருவாதிரை, B.Sc Computer Science Software and Hardware Engineering, UK - citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை-57597
2. இணுவில், இந்து, 1994, திருவோணம், Bachelor of Civil Engineering, Civil Engineer, Australia citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை-54449.
3. அளவெட்டி, இந்து, 1993, விசாகம், B.Sc Engineering, Engineer, Australia citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை- 55831
4. சுன்னாகம், இந்து, 1992, பரணி, Electronic Engineering, Switzerland citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை-53671
5. காரைநகர், இந்து, 1991, அனுஷம், B.Sc Engineering, Engineer Singapore மாப்பிள்ளைக்கு பெண் தேவை-55580
6. கரவெட்டி, இந்து, 1990, மகம், M.Sc Telecommunication Engineering, Engineer, Finland citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை-54757
7. வட்டுக்கோட்டை, இந்து, 1988, Graduate Sponts & Data Analysis, Australia citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை-45522
8. கொக்குவில், இந்து, 1987, Civil engineering, Chartered Engineer, Ireland citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை-44086
9. சுன்னாகம், இந்து, 1995, மகம், Bio medical Engineering, Engineer, Germany citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை-35005
10. காலை நகர், இந்து, 1985, பூசம், BSc Hons Computer Science, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை-33985

**S.Sharma J.P** 077 189 0367 / 077 5393 728

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



தோற்றம் 08 . 04 . 1939 — மறைவு 27 . 04 . 2026

### அமரர் இந்திரமலர் தியாகராசா

யாழ்ப்பாணம் கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கு, கொடிகாமத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இந்திரமலர் தியாகராசா அவர்கள் கடந்த 27.04.2026 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான ஏரம்பு-நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான நற்குணராசா, தனபாலரத்தினம், மோகனேஸ்வரி மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான மனோன்மணி, பவளரதம், வேலாயுதம் மற்றும் குபேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுகுமார், சுமதி, சுகந்தி, சுதாகரன், சுதர்ஷன், சுசித்திரா, முருகதாஸ் ஆகியோரின் பாசமிகு தாயாரும், மைதிலி, மனோகரன், சுஜாதா, சுசீலகாந்தன், ஹேமலதா, ஓம்பிரகாஷ், பாரதி ஆகியோரின் அன்பு மாமியாரும், தியாசன், விஷாலி, சஞ்ஜிற், தக்ஷனா, சுதர்ஷனா, யதுஷனா, ஜனனி, ஜனோஷன், சுஜேபன், சுஜந்தன், இந்திரா, கஜானனன், காயத்ரி, யதுஷிகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், நிஷ்விந், ஸாஹித், ஷ்ரேமன், நாதானின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.04.2026) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(CS 31508) A

**மீசாலை வடக்கு,**
**கொடிகாமம்.**
**(வீரசிங்கம் பாடசாலை வீதி)**

**தகவல்: குடும்பத்தினர்**
**தொடர்புகளுக்கு:**
**077 [illegible]**
**075 242 6805**

## மரண அறிவித்தல்



தாயின் மடியில் 26 . 04 . 1940 — இறைவன் அடியில் 28 . 04 . 2026

### திருமதி பரமேஸ்வரி தர்மசேகரம்

**(ஓய்வுபெற்ற தையல் போதனாசிரியை, முறைசாராக் கல்வி)**

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் திருகோணமலை, மானிப்பாய், தற்போது காளி கோவிலடி சண்டிலிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி தர்மசேகரம் அவர்கள் நேற்று (28.04.2026) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிங்கராஜா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிவஞானசுந்தரம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தர்மசேகரம் (ஓய்வுபெற்ற இயந்திர இயக்குனர், சங்கானை ப.நோ.கூ.சங்கம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகதாஸ், முருகையா, கோணலிங்கம் மற்றும் ஈஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராஜரட்ணம், ஞானம்மா, சிவாஜினி, காலஞ்சென்றவர்களான கமலாதேவி, தங்கராஜா, யோகராணி மற்றும் நவரத்தினராசா, யோகராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும், விபூஷானந்தி (ஆசிரியை, யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை), உஷானந்தி (ஆசிரியை, யா/இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம்), பிரஷானந்தி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், சங்கானை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுந்தரகுமார் (உப தபாலகம், ஆனைக்கோட்டை), பகீரதன் (கட்டட மேற்பார்வையாளர், யாழ்ப்பாணம்), சுரேஸ்கரன் (உரிமையாளர், உழவர் களஞ்சியம், திருநெல்வேலி) ஆகியோரின் அன்பு மாமியாரும், அபிஷணன், அபிஷ்ணவி, அஜீஷன், அனுஷ்கவி, சயிந்தவி, சாகித்தியன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், இராஜீசன், இரஜீந்தினி ஆகியோரின் பெரியம்மாவும், சிவாஈஸ்வரன், சிவனேஸ்வரன், பிரதீஸ்வரன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2026) புதன்கிழமை மதியம் 12.00 மணியளவில் சண்டிலிப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CR 47460) A

**077 622 4206**
**076 7575 769**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி நடாத்தும் வலிகாமம் வலயப் பாடசாலைகளுக்கிடையிலான அமரர் மயிலுப்பிள்ளை ஞாபகார்த்த ஸ்கந்தாவின் கணிதச் சமர், கனடா பழைய மாணவர் சங்க ஸ்கந்தாவின் விஞ்ஞான சமர்**

போட்டி நடைபெறும் இடம் : யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
பங்குபற்றுனர்கள் : வலிகாமம் வலய பாடசாலை மாணவர்கள்
பங்குபற்றும் தரங்கள் ; தரம் 6, தரம் 9, தரம்10, தரம் 11

காலம்

| தரம் | போட்டி | திகதி | நடைபெறும் நேரம் |
|---|---|---|---|
| 6 | கணிதச் சமர் | 14.06.2026 | மு.ப 8.30 – மு.ப 9.15 |
| 6 | விஞ்ஞானச் சமர் | 14.06.2026 | மு.ப 9.30 – மு.ப 10.15 |
| 9 | கணிதச் சமர் | 14.06.2026 | மு.ப 10.45 – மு.ப11.30 |
| 9 | விஞ்ஞானச் சமர் | 14.06.2026 | மு.ப 11.45 – மு.ப 12.30 |
| 10 | கணிதச் சமர் | 14.06.2026 | பி.ப 1.30 – பி.ப 2.15 |
| 10 | விஞ்ஞானச் சமர் | 14.06.2026 | பி.ப 2.30 – பி.ப 3.15 |
| 11 | கணிதச் சமர் | 14.06.2026 | பி.ப 1.30 – பி.ப 2.15 |
| 11 | விஞ்ஞானச் சமர் | 14.06.2026 | பி.ப 2.30 – பி.ப 3.15 |

பரிசில் விபரம்

| பரிசில் | கணிதச் சமர் | விஞ்ஞானச் சமர் |
|---|---|---|
| 1ஆம் பரிசு | ரூபா 20000.00 | ரூபா 20000.00 |
| 2ஆம் பரிசு | ரூபா 15000.00 | ரூபா 15000.00 |
| 3ஆம் பரிசு | ரூபா 10000.00 | ரூபா 10000.00 |
| 4ஆம் பரிசு | ரூபா 7000.00 | ரூபா 7000.00 |
| 5ஆம் பரிசு | ரூபா 5000.00 | ரூபா 5000.00 |

ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் பங்குபற்றக்கூடிய மாணவர் விபரம்:-

| தரம் | பங்கு பற்றக்கூடிய மாணவர் தொகை | |
|---|---|---|
| | கணிதச் சமர் | விஞ்ஞானச் சமர் |
| 6 | 5 | 5 |
| 9 | 5 | 5 |
| 10 | 4 | 4 |
| 11 | 4 | 4 |

அதிபர்
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
சுன்னாகம்

தொடர்புகளுக்கு:
070 616 0223


# மரண அறிவித்தல்



தோற்றம் 08 . 09 . 1938
மறைவு 27 . 04 . 2026

**பூரணசற்குணலிங்கம் கனகம்மா**
**(ஓய்வு நிலை முன்னாள் அதிபர் பனங்காமம், மூன்றுமுறிப்பு அ.த.க பாடசாலை)**

வீரபத்திரர் கோவிலடி, கோப்பாய் தெற்கு, கோப்பாயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பூரணசற்குணலிங்கம் கனகம்மா அவர்கள் கடந்த (27.04.2026) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - பறுவதம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம் - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், பூரணசற்குணலிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும், சிவசுதன், சிவகரன் ஆகியோரின் அன்புத் தாயும், சியாமளா, சிவாஜினி ஆகியோரின் மாமியும், சயனுதா, பவிசன், மிதுசா, அட்சயன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற கனகசபை, காலஞ்சென்ற உத்தரகோசமங்கை, சோதி, கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற மகாலிங்கம் அவர்களின் மைத்துனியும், முத்துவேல் செட்டியார், சுசிலாதேவி, ரவீந்திரகுமார், இந்திரகுமார், லதா, ஆனந்தராசா, கவிதா, காலஞ்சென்ற லலிதாம்பிகை, அருணாம்பிகை, குலேந்திரநாதன், ரகுநாதன், ரவீந்திரநாதன், சிவநாதன் ஆகியோரின் சிறிய தாயும், நளாயினி, சுதர்சினி, கௌரிபாலன் ஆகியோரின் பெரியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2026) புதன்கிழமை முற்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இருபாலை நொச்சிக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வீரபத்திரர் கோவிலடி,**
**கோப்பாய் தெற்கு,**
**கோப்பாய்.**

**தகவல்**
**குடும்பத்தினர்**

## வாக்குமூலம் வழங்கிய மைத்திரிபால

கொழும்பு, ஏப்.29

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு வாக்குமூலம் வழங்கினார்.

இலஞ்ச அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவால் முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணை ஒன்றுக்காக வாக்குமூலம் வழங்குவதற்காக, அவர் நேற்று ஆணைக்குழுவுக்குச் சென்றிருந்தார்.

(எ-இ)

உ

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் திரு. இராமசாமி சோமசுந்தரம்
## (பரிஸ் ரெக்ஸ் உரிமையாளர்)

ஒரு ஆண்டு ஓடியதே அறியாமல்
உங்கள் பிரிவின் வேதனை குறையாமல்
எங்கள் அப்பா எங்கள் உயிர்நாடி
எங்கள் வாழ்வின் நிலையான நிழல்
இன்று கண்களுக்கு அப்பாற்பட்டாலும்
எங்கள் இதயத்தில் என்றும் ஒளியாக
வாழ்கிறார்
அன்னாரின் ஆத்மா சாந்தி பெற
பிரார்த்திக்கிறோம்.

-குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீழ்த்தரமான அரசியலில் தமிழ் அரசியல்வாதிகள்

## விமலேஸ்வரி குற்றச்சாட்டு




யாழ்ப்பாணம், ஏப்.29

அரசியல் இருப்புக்காக மிகவும் கீழ்த்தரமான செயற்பாடுகள் தமிழ் அரசியல்வாதிகள் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் அம்மணமாக நின்றாலும் அரசியல் செய்வோம் என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றனர் என்று ஜனநாயக தமிழரசுக் கட்சியின் உபதலைவி விமலேஸ்வரி தெரிவித்துள்ளார். தந்தை செல்வாவின் 49 ஆவது நினைநாள் நிகழ்வுக்கு, முன்னாள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸை அழைத்தமை தொடர்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தந்தை செல்வாவுக்கு மரியாதை செலுத்த, அனைத்துக் கட்சியினரும் இந்த நிகழ்வில் பங்கேற்பது வழமை. இந்த முறை நிகழ்வில் முன்னாள் அமைச்சர் பீரிஸ் அழைக்கப்பட்டுள்ளார். இவர் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற சமாதான பேச்சுவாத்தைகளில் அதிகம் கலந்து கொண்ட ஒருவர்.

விட்டுக்கொடுப்பில்லாது சமாதான பேச்சுக்களை குழப்பிய ஒருவர் இவர். இவர் அரசியல்வாதிகளுக்கு சமஸ்டி தொடர்பில் வகுப்பெடுக்க அழைக்கப்பட்டுள்ளார். இவ்வாறனவர்கள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, கோத்தாபய ஆகியோரையும் அழைக்கலாம். இவ்வாறு தான் எமது இனத்தின் இருப்பு இலக்குகள் அழிக்கப்படுகின்றன. தமிழ் மக்களை எவ்வாறெல்லாம் பிளவுபடுத்தலாம், அவர்களது வரலாறுகளை எவ்வாறு சிதைவுறுத்தலாம் என்பதையே இவர்கள் இலக்காகக் கொண்டுள்ளனர் என்று அவர் தெரிவித்துள்ளார். (க-20)

# கடை திறப்பு விழா அழைப்பு

## ஸ்ரீசரவண பவன்

## உயர்தர சைவ உணவகம்

இன்று (29.04.2026) புதன்கிழமை

காலை 08.59 - 11.06 வரையுள்ள சுபவேளையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று

அனைத்து வாடிக்கையாளர்களையும் வருகை தருமாறு வருக வருக என வரவேற்கின்றோம்.

- காலை உணவுகள்
- சிற்றுண்டி வகைகள்
- மதிய உணவுகள்
- இரவு உணவுகள்
- ஸ்வீட்வகைகள்
- காரவகைகள்

**தெற்கு புன்னாலைக்கட்டுவன்**

(சந்தியிலிருந்து 1 Km தொலைவில்

**தொ.இல. 077 563 3459**

(cs.61325) (N-1)

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
# VACANCY

The University of Jaffna, Sri Lanka will entertain applications from suitably qualified persons for the following post:

1. ASSISTANT REGISTRAR (LEGAL & DOCUMENTATION) (UNIVERSITY OF JAFFNA)

**Qualifications:-**

An Attorney-at-Law with A Degree in Law/Legal Studies with not less than two (02) years of experience gained in Court work, Legal work and drafting legal documentation in a State/Corporation or Reputed Private Sector Organization or official bar after obtaining the above qualification.

OR

An Attorney-at-Law with not less than three (03) years of experience gained in Court work, Legal work and drafting legal documentation in a State/Corporation or Reputed Private Sector Organization or official bar after obtaining the above qualification.

**Salary Scale** : U-EX 1(II)
Rs. 85,305-3X2,020-91,365(EB) 93,765;12X2,400-122,565/- p.m.

**Selection** : By Structured Interview

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System
3. Gratuity payment
4. Employment Trust Fund benefits
5. Free Medical Services

Applications should be on **specified form** issued by the University. Application form and particulars for the above posts can be **downloaded only from www.jfn.ac.lk** Applicants should deposit Rs.1000.00 at any branch of the People's Bank in favour of **University of Jaffna Account No. 970 0000 9000 0387**. Applications must accompany a bank deposit slip and copies of relevant documents. **All the Educational/Professional qualifications and experience obtained as at the closing date of the applications will only be considered when evaluating the candidates. Application without the copy of the supportive documents for Educational/Professional and Experience will be rejected.**

The envelope containing the duly filled application form must bear Title of the Post on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the Office of the **Deputy Registrar/ Non-Academic Establishments** of this University on or before **30.05.2026**.

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through their Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected without intimation.

**REGISTRAR,**
**University of Jaffna.**
**29.04.2026.**

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

## கண்ணிவெடி அகற்றுபவர்களுக்கான வேலைவாய்ப்பு அறிவித்தல்.

ஹலோ ட்ரஸ்ட் என்பது உலகின் மிகப்பெரிய மற்றும் நீண்ட காலமாக இயங்கிவரும் சர்வதேச மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் நிறுவனமாகும். 30 **ஆண்டுகளுக்கும் மேலாக**, ஹலோ வெடிபொருள் அச்சுறுத்தல்களை நீக்கி, எதிர்கால சந்ததியினருக்காக நிலத்தைப் பாதுகாப்பானதாக மாற்றுவதன் மூலம், உயிர்களைக் பாதுகாத்து போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்கள் மீண்டுவர உதவி வருகிறது.

இலங்கையில், ஹலோ நிறுவனம் 2002 ஆம் ஆண்டு முதல் வட மாகாணத்தில் 500 க்கும் மேற்பட்ட பணியாளர்களைக் கொண்டு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய இடங்களில் அலுவலகங்களை அமைத்து செயல்பட்டு வருகிறது. ஹலோ நிறுவனம் 300,000 க்கும் மேற்பட்ட தனிநபர் எதிர்ப்பு கண்ணிவெடிகள் உட்பட 1 மில்லியனுக்கும் அதிகமான வெடிபொருட்களைப் பாதுகாப்பாக அழித்துள்ளது.

**இந்த வேலைவாய்ப்பு முல்லைத்தீவு மாவட்டத்திற்கு மட்டுமே உள்ளது. மேலும், பணியாளர்கள் கொக்குத்தொடுவாய் ஹலோ பணிப் பகுதிகளில் நாளாந்தம் பணியமர்த்தப்படுவார்கள்.**

**கண்ணிவெடி அகற்றுபவர்களின் பொறுப்புக்களாவன:**

- நிலையான நடவடிக்கை நடைமுறை (SOP)க்கு அமைவாக கண்ணிவெடிகள் மற்றும் வெடிபொருட்களை அகற்றுதல்.
- வெடிபொருள் (EO) அச்சுறுத்தலிலிருந்து அடுத்த தலைமுறையைப் பாதுகாத்தல்
- இடம்பெயர்ந்த சமூகங்கள் மிக விரைவில் தங்கள் வீடுகளுக்குத் திரும்பி சென்று, தங்கள் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப உதவுதல்

**யார் இதற்கு விண்ணப்பிக்கலாம்?**

- நீண்ட நேரம் வெளியில் வேலை செய்ய விருப்பமுள்ளவர்கள்
- பெண்கள் விண்ணப்பிக்க மிகவும் ஊக்குவிக்கப்படுகிறார்கள்
  40 வயதுக்கு உட்பட்டவர்கள்
- நல்ல உடல் தகுதி மற்றும் நல்ல மன நலத்துடன் ஆரோக்கியமாக இருப்பவர்கள்
- நல்ல கண் பார்வை மற்றும் கேட்கும் திறன் உள்ளவர்கள்
- குழுவாக பணியாற்ற கூடியவர்கள் மற்றும் சேவை மனப்பாங்கு உடையவர்கள்
- **முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாயில் காலை 5:00 மணிக்குத் தங்களது சொந்த வாகனத்தில் பணிக்கு சமூகமளிக்கக் கூடியவர்கள். (நிறுவனம் எந்தப் போக்குவரத்து வசதியையும் வழங்காது.)**

குறிப்பு:

- தகுதிப்பட்டியலில் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் 22 நாள் பயிற்சியில் கலந்துகொள்ள வேண்டும்.
- பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்கள் மட்டுமே கண்ணிவெடி அகற்றுபவர்களாக உத்தியோகப்பூர்வமாகப் பணியமர்த்தப்படுவார்கள்.
- விண்ணப்பதாரர் பயிற்சியில் தேர்ச்சி பெறாவிட்டாலும், பயிற்சிக் காலத்திற்கான சம்பளம் வழங்கப்படும்.

அனைத்து விண்ணப்பங்களும் **2026 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர்**, கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு **தபால் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல்** மூலமாகவோ சமர்ப்பிக்கப்பட வேண்டும். கீழே வழங்கப்பட்டுள்ள எங்கள் ஒன்லைன் படிவத்தின் மூலமாகவும் விண்ணப்பிக்கலாம்.

**இது** மிகவும் இலகுவானது! ஒன்லைனில் விண்ணப்பப் படிவத்தை பெற்றுக்கொள்ள. QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

போதுமான தகுதியுள்ள விண்ணப்பங்களை பெறுமிடத்து, குறிப்பிடப்பட்ட திகதிக்கு முன்னதாகவே இந்தப் பணிக்கான விண்ணப்பங்களை நிறுத்துவதற்கான உரிமை எங்களுக்கு உண்டு. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் மட்டுமே தொடர்பு கொள்ளப்படுவார்கள். மேலும் தகவல்களுக்கு, 0212285466 எனும் தொலைபேசி எண்ணைத் தொடர்பு கொள்ளவும். இந்தப் பணியிடத்திற்கு அனைத்துப் பின்னணிகளை உடையவர்களையும் விண்ணப்பிக்குமாறு ஹலோ ஊக்குவிக்கிறது. குறிப்பாக, பெண் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்களை நாங்கள் வரவேற்கிறோம்.

**மனிதவள முகாமையாளர்**
**ஹலோ ட்ரஸ்ட்,**
**450 திருநகர் மேற்கு,**
**கிளிநொச்சி**
[illegible]

(cr.47458) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# கையேந்தி நாடு...!

ஒரு நாட்டின் இறையாண்மை என்பது அதன் எல்லைகளைப் பாதுகாப்பதில் மாத்திரம் தங்கியிருப்பதில்லை; அது அந்த நாட்டு மக்களின் வயிற்றை நிரப்பும் 'உணவுத் தீர்மான உரிமையிலும்' தங்கியுள்ளது. இலங்கையில் அபாய நிலைமையை நோக்கிப் பயணிக்கும் விதை நெருக்கடியை சாதாரண விடயமாகக் கடந்துவிட முடியாது. இலங்கையின் மரக்கறி மற்றும் பழங்களுக்கான விதைத்தேவையில் 92 சதவீதம் இறக்குமதியைச் சார்ந்திருப்பது மிக அபாயகரமான நிலைமையாகும். சில ஆண்டுகளுக்கு முன்பு 80 சதவீதமாக இருந்த இந்தத் தங்கியிருப்பு, தற்போது 92 சதவீதமாக உயர்ந்துள்ளமை 'நாம் முன்னேற்றப் பாதையில் செல்லவில்லை, மாறாக தற்கொலைப்பாதையில் பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம்' என்பதையே வெளிப்படுத்தியிருக்கின்றது. ஒரு விவசாய நாடு தனது அடிப்படை விதைகளுக்காகவும் வெளிநாடுகளின் கதவுகளைத் தட்டிக் கொண்டிருப்பது அந்த நாட்டின் பொருளாதார முதுகெலும்பு முறிந்துள்ளதையே காட்டுகிறது.

விதைத் தட்டுப்பாடு மற்றும் இறக்குமதித் தங்கியிருப்பு இலங்கையின் பொருளாதாரத்தில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. விதை இறக்குமதி 95 சதவீதத்தைத் தாண்டுவதற்கு இடமளித்தால், எதிர்கால சந்ததியினர் ஒரு விதையைக்கூட சுயமாக உற்பத்தி செய்ய முடியாத 'விதை அடிமைத்துவத்துக்கு' தள்ளப்படுவார்கள். எமது உணவுத் தேவைக்கான திறப்பு, பிறநாட்டின் கையில் இருக்கும் வரை, காகிதத்தில் எழுதும் 'உணவுப் பாதுகாப்பு' திட்டங்கள் வெறும் வெற்றுப் பேச்சுக்களாகவே இருக்கும்.

நாடு கடும் பொருளாதார நெருக்கடியில் இருக்கும் சூழலில், எம்மால் உற்பத்தி செய்யக்கூடிய விதைகளுக்காகப் பெருமளவு அந்நியச் செலாவணியை வெளிநாடுகளுக்குத் தாரை வார்ப்பது அறிவார்ந்த செயலல்ல. மறுபுறத்தில் சர்வதேச அரசியல் மாற்றங்களோ அல்லது விநியோகச் சங்கிலித் தடைகளோ ஏற்பட்டால், விதைகள் கிடைக்காத ஒரு சூழலில் முழு நாடும் பட்டினிக் கிடக்கும் அபாயம் உள்ளது. நமது மண்ணுக்கேற்ற பாரம்பரிய விதைகளை நாம் தொலைத்துவிட்டு, ஆய்வகங்களில் உருவாக்கப்பட்ட மலட்டு விதைகளை நம்பியிருப்பது எம்மை நாமே அழித்துக்கொள்வதற்குச் சமம்.

அரசாங்கமும் கொள்கை வகுப்பாளர்களும் இனியாவது விழித்துக்கொள்ள வேண்டும். இலங்கையின் மண்ணுக்கும் காலநிலைக்கும் ஏற்ற உயர்தர விதைகளை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய விவசாயத் திணைக்களம் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்குப் போதிய நிதி ஒதுக்கப்பட வேண்டும். இலங்கையை ஒரு 'விதை தன்னிறைவு' கொண்ட நாடாக மாற்ற முன்வர வேண்டும். இல்லையெனில், அடுத்த தலைமுறை உணவுக்காக மாத்திரமன்றி, ஒரு விதைக்காகவும் ஏனைய நாடுகளிடம் கையேந்தி நிற்கும் அவலநிலை உருவாகும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## பொய்யாமொழி

**இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ**
**வன்சொல் வழங்கு வது**

**பொருள்:** இனிய சொற்கள் இன்பம் பயத்தலைக் காண்கின்றவன், அவற்றிற்கு மாறான வன்சொற்களை வழங்குவது என்ன பயன் கருதியோ?




## பெரும் விதைத்தட்டுப்பாட்டை எதிர்நோக்கவுள்ள இலங்கை!

### தேசிய விவசாயிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஏப்.29

**உலகளாவிய அரசியல் ஸ்திரமற்ற தன்மை மற்றும் இறக்குமதிச் சிக்கல்கள் காரணமாக எதிர்காலத்தில் விவசாய விதைகளுக்குத் தட்டுப்பாட்டை எதிர்நோக்கவேண்டியிருக்கும் எனத் தேசிய விவசாயிகள் சங்கத்தின் தலைவர் அனுராத தென்னகோன் தெரிவித்துள்ளார்.**

நாட்டின் மரக்கறி மற்றும் பழங்களுக்கான விதை தேவையில் தற்போது 92 வீதம் வெளிநாடுகளில் இருந்தே கொண்டுவரப்படுகிறது. விதை விநியோகத்தில் தனியார் துறையினரின் ஆதிக்கம் அதிகமாக உள்ளதால், விதைகளின் விலை கட்டுக்கடங்காமல் உயர்ந்துள்ளது. இது கரட், கோவா, லீக்ஸ் மற்றும் தர்பூசணி போன்ற பயிர்ச்செய்கைகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகளைப் பெரும் நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது.

உள்நாட்டு விதைத் தேவையைப் பூர்த்திசெய்வதற்கு முறையான வேலைத்திட்டம் மேற்கொள்ளவில்லை. அரசாங்கம் உடனடியாகத் தலையிடாவிட்டால், விதை இறக்குமதி 95 வீதத்தைத் தாண்டும் அபாயம் ஏற்படும். உள்ளூர் விதை உற்பத்தியாளர்களுக்கு ஆதரவளிப்பதன் மூலம் உள்நாட்டு விதை உற்பத்தியை ஊக்குவிக்க வேண்டும் - என்றார். (ச-இ)



## தங்க விலை சரிவு

கொழும்பு, ஏப்.29

தங்கத்தின் விலை நேற்று வீழ்ச்சியடைந்திருந்தது என்று அகில இலங்கை நகையக வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

24 கரட் தங்கம் பவுண் ஒன்று 397,000 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில், நேற்று அதன் விலையில் 2,000 ரூபா சரிவு ஏற்பட்டது. 24 கரட் தங்கம் பவுண் ஒன்று நேற்று 395,000 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது. 22 கரட் தங்கம் பவுண் ஒன்று 363,400 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது என்று அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது. (எ-இ)

## பிக்குகளுக்கு கட்டுப்பாடு விதிக்குமாறு கோரிக்கை

கொழும்பு, ஏப்.29

கட்டுநாயக்க விமான நிலையத்தில் பிக்குகள் குழுவொன்று போதைப்பொருள்களுடன் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், பிக்குகளின் வெளிநாட்டுப் பயணங்களுக்கான கட்டுப்பாடுகளை மீள நடைமுறைப்படுத்துமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் பிக்குகள் வெளிநாடு செல்வதற்கு மகாநாயக்க தேரர்களின் எழுத்துமூல அனுமதி கட்டாயமாக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த நடைமுறையை அரசாங்கம் அண்மையில் நீக்கியிருந்தது. இந்தக் கட்டுப்பாட்டு முறையை மீண்டும் உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு மகா நாயக்க தேரர்கள் கோரிக்கை விடுத்துள் ளனர். (எ-இ)

## சுற்றிவளைப்பில் 576 பேர் கைது

கொழும்பு, ஏப்.29

நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், குற்றச்செயல் மற்றும் போதைப்பொருள் நடவடிக்கைகள் தொடர்பில் 576 பேர் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ-இ)



## வடக்கில் 95 பேருக்கு அரச நியமனக்கடிதம்

வடக்கு மாகாண பொதுச்சேவையின் இணைந்த சேவைப் பதவிகளுக்கான நியமனக்கடிதங்கள் வழங்கும் விசேட நிகழ்வு, வடக்கு மாகாணசபையின் பிரதம செயலாளர் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

நிகழ்வில், வடக்கு மாகாண சபைக்குட்பட்ட திணைக்களங்களில் நிலவிய வெற்றிகங்களுக்காகத் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் 37 பேர், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் 14 பேர் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் 44 பேர் ஆகியோருக்கு உத்தியோகபூர்வமாக நியமனக்கடிதங்கள் வழங்கப்பட்டன. (க-113)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# உரும்பிராய்...
# கருணைமிகு ஸ்ரீ கருண...
# மஹா கு...
## இன்று (29.04.2026) புதன்கிழமை...



### சிவஸ்ரீ சபாரத்தின பரமேஸ்வரக்குருக்கள் அவர்களின் ஆசியுரை

**உரும்பிராய் -பரத்தைப்புலம் ஸ்ரீ கருணாகரப்பிள்ளையார் கோவில்**
**ஆதீனகர்த்தா - ஸ்தானீக சிவாச்சார்யார் மஹாகும்பாபிஷேக பிரதிஷ்டா பிரதம சிவாச்சார்யார்**
**சிவாகம கிரியா பூஷணம் - பிரதிஷ்டா வித்வசிரோமணிசிவஸ்ரீ சபாரத்தின பரமேஸ்வரக்குருக்கள்.**

முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானுடைய கருணையினால் நமக்கு புனிதமான அரிய மானுடப்பிறவி கிடைத்தது, இப்பிறவியை நமக்களித்த இறைவனை நாம் துதித்து வணங்கி வழிபடுவதற்கு ஏற்ற இடம் ஆலயமாகும். தேவரும் மூவரும் ஏவரும் போற்றும் தனித்தெய்வமாக விளங்குபவர் விநாயகப்பெருமான். ஓங்கார ரூபரான விநாயகரது வடிவத்தை "பிரணவம் பஞ்சலக்ஷணம்" என்று காமிகாமமும் "இறை சக்தி எழில் ஆவி உற நிற்கும் ஓங்காரத்துள்" என்று திருவருட் பயனும் கூறுகின்றன.இப்படியான விநாயகப் பெருமான் உரும்பிராய் கிராமத்தில் பரத்தைப்புலம் என்னும் திவ்விய பதியில் "ஸ்ரீ கருணாகரப்பிள்ளையார்" என்னும் திருநாமம் தாங்கி அடியார்களுக்கு கருணை மழைபொழிந்து அருளாட்சி புரியும் இடம் ஸ்ரீ கருணாகரப்பிள்ளையார் கோவிலாகும். பழமையும் பெருமையும் மிகுந்து சரித்திரப் புகழ்பெற்ற எமது குலதெய்வமாகவும் பரம்பரை ஆலயமாகவும் விளங்கும் இவ்வாலயம் உத்தேசமாக நானூறு ஆண்டுகளுக்கு முற்பட்டது என்றும் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் சிவஸ்ரீ கருணாகரக்குருக்கள் அவர்களால் புதுப்பிக்கப்பட்டு பூஜித்து வழிபாடாற்றிய ஆலயம் என்பதும் சரித்திர வரலாறு ஆகும். இவ்வாலய பழமைக்குச் சான்றாக ஓர் கல்வெட்டுச்சாசனமும் உண்டு.உள்ளூர், அயலூர், வெளியூர், வெளிநாடு ஆகிய இடங்களில் வசிக்கும் கருணாகரப்பிள்ளையாருடைய அடியவர்களின் பேருதவிகளினாலும் ஆலய திருப்பணிச்சபை யினருடைய உதவியினாலும் இவ்வாலய திருப்பணிகள் நடைபெற்று 29.04.2026 புதன்கிழமை மஹா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. எம்பெருமானுடைய திருவருள் துணை முன்னிற்க நடைபெறும் இம் மஹா கும்பாபிஷேக விழாவில் எமக்கு உதவியாக இருந்த சிவாச்சார்யார் கள், அந்தனப் பெருமக்கள், பாமாலை பாடியவர்கள், பூமாலை தொடுத்தவர்கள், மங்கள இசையாளர்கள், திருப்பணிச்சபையினர், நிதியுதவிய அன்பர்கள் அனைவருக்கும் நன்றியும் நல்லாசிகளும் கூறுவதுடன் இம் மஹா கும்பாபிஷேக விழாவைத் தரிசித்த அனைத்து அடியார்கள் உட்பட அனைவரும் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வங்களும் பொருந்த நீடுழி வாழவேண்டும் என்று திருவருள் வேண்டி எமது நல்லாசிகளை நல்குவோமாக! கருணாகரப்பெருமான் பாதம் கனலும் துணைசெய்யும்

சுபமஸ்து



### "வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்"

**சிவாகம கிரியாதிலகம்**
**சிவஸ்ரீ சபாரத்தின மங்களேஸ்வரக் குருக்கள்**
**(ஆதீனகர்த்தா குருபரம்பரை ஸ்ரீ கருணாகரப்பிள்ளையார் கோவில் - உரும்பிராய்) கொழும்பு.**

நமது சைவ சமயத்தில் முதற் பூஜைக்கும் முதல் வழிபாட்டிற்கும் உரியவர் விநாயகப் பெருமாள், கருணாகரப்பிள்ளையாரை வழிபட்டு ஆரம்பிக்கும் எக்காரியங்களும் எவ்வித இடையூறுகளுமின்றி சிறப்பாக நிறைவேறும் என்பது எமது நம்பிக்கையும் மரபுமாகும். மிகவும் பழமையும் பெருமையும் வாய்ந்த ஸ்ரீ கருணாகரப்பிள்ளையாரை நித்திய காலப் பூஜை செய்து அவரது கடமையுடன் கல்வியையும் பயின்ற காலங்கள் என்றும் மறக்கமுடியாதவை திருப்பணி சேவைகளை சிறப்பாக நிறைவேற்ற உதவிய திருப்பணிச் சபையினர், நிதியுதவிகளை வழங்கியவர்கள் அனைத்து கருணாகரன் அடியவர்கள் யாவரும் சகல நலன்களும் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ நல்லாசிகளை நல்குவோமாக



### கருணைமிகு ஸ்ரீ கருணாகரப் பிள்ளையார் திருவருள் உதிப்பு குடமுழுக்கு

**அ. ஈஸ்வரநாதன்**
**திருப்பணிச் சபை சார்பில்**
**உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில்.**

ஒப்பரிய உரும்பிராய் பக்திமிகு பரத்தைப்புலமதனில் கோயில் கொண்டு
செப்பரிய கருணை மழை தன்னடியவர்க்கு பொழிந்ததால்
அப்பெரிய கோபுரமும் உடன்உறை பரிவார மூர்த்திகளும் கொண்ட
இப்பெரிய திருப்பணியைச் செய்ய வைத்தனன் கருணாகரன் திருவருளே.

ஆலயங்கள் புனரமைப்புச் செய்தலும் கும்பாபிஷேகம் செய்விப்பதும், அதில் பங்கு கொண்டு பணியாற்றுவதும், தரிசிப்பதும் அளப்பரிய புண்ணியமாகும். அடியவர்களின் ஆன்மீக உணர்வுகள் மேலோங்கியும் ஊரின் தூய்மை அதிகரிக்கவும் திருப்பணி செய்வதன் மூலம் திருப்தியைப் பெறலாம். முடிவில் திருவருள் சாந்நித்தியம் அதிகரிக்கவும், ஆலயம் புதுப்பொலிவு பெறவும் குடமுழுக்கு(மஹா கும்பாவிஷேகம்) செய்யப்படுகின்றது. உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில் இலங்கையில் சரித்திரப் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றாக பசுமைமிகு தோட்டங்களும் பல்வேறுபட்ட வளங்களும் சூழ அமையப்பெற்று விளங்குகின்றது. பிள்ளையாரின் திருவடிகளை மனதிலே நினைத்தால் தொல்லை துன்பம் துயரம் முதலானவை நீங்கப் பெற்று நல்வாழ்வை பெறமுடியும். கருணாகரப் பிள்ளையாரை வழிபடுபவர்கள் வாழ்க்கையில் சகல செல்வங்களையும் பெற்று நற்கதி அடைவார்கள். இதனாலேயே "கருணாகரன் பாதம் கனவிலும் துணை செய்யும்" என்று பெரியோர்கள் கூறுவார்கள். 2014 இல் நடைபெற்ற கும்பாபிஷேகத்திலும் அடியேன் திருப்பணிப் பொறுப்பாளராக செயற்பட்டிருந்தேன். அதனிலும் கூடுதலான திருப்பணிகள் இம்முறை நிறைவடைந்துள்ளது. இப்பணியில் ஆட்பட்ட அனைவரும் ஸ்ரீ கருணாகரப் பிள்ளையார் திருவருளால் சகல பாக்கியங்களும் குறையிலாது பெறவும், அழகு மிளிர சிற்பங்களை செதுக்கியவர்கள், வர்ண வேலைகளைச் செய்தவர்கள் ஸ்பதிகள், ஏனையோர்கள், கருணாகரன் அடியவர்கள்.கருணாகரப் பெருமானின் கும்பாபிஷேக தரிசனத்தின் மூலம் எல்லா நன்மையுமுண்டாகவும், கும்பாபிஷேகம் சிறப்புறவும் ஸ்ரீ கருணாகரப் பெருமானின் பாதாரவிந்தங்களைப் பணிந்து வணங்கிப் பிரார்த்திக்கின்றோம்.

"கருணாகரன் பாதம் கனவிலும் துணை செய்யும்"



### செஞ்சொற்செல்வனின் வாழ்த்துரை

**கலாநிதி . ஆறு. திருமுருகன்**
**தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை.**
**தலைவர், சிவபூமி அறக்கட்டளை, இலங்கை.**

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையாரின் மகாகும்பாபிஷேகம் குறித்து அடியார்களுக்கு வாழ்த்துக் கூறுவதில் ஆனந்தமடைகின்றேன் வரலாற்றுத் தொன்மை மிக்க இவ்வாலயத்தை காலங்காலமாக பராமரித்துப் பாதுகாத்துவருபவர்கள் சிவாச்சாரியக் குடும்பத்தவர்கள். அமரத்துவமடைந்த சிவஸ்ரீ . வை. சபாரட்ணக் குருக்கள் அவர்கள் இவ்வாலயத்தின் வளர்ச்சியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துத் தொண்டாற்றியமை மறக்க முடியாது. இன்று அவரது தலை மகன் சிவஸ்ரீ சபா. பரமேஸ்வரக் குருக்கள் தங்கள் பரம்பரைக் கோவிலை பாதுகாப்பதில் மிகவும் அக்கறையாகவுள்ளார். ஆலய வளர்ச்சிக்குத் திருப்பணி ஆற்றுவதற்கு அறங் காவலர்க்கு ஒத்துழைக்கும் அன்பர்கள் பாராட்டுக்குரியவர்கள். முன்பு ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம், கணக்காளர் பசுபதி போன்ற பெரியவர்கள் ஆற்றியதொண்டு நன்றிக்குரியவை. இன்றும் பல்வேறு திருப்பணிவேலைகளை நிறைவேற்றி வரும் திருப்பணிச் சபைக்கும் அடியார்களுக்கும் யாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். கருணாகரப் பிள்ளையாரின் மகாகும் பிஷேகம் சிறப்பாக நடைபெறப் பிரார்த்தித்து இத்திருக்கோவில் சிறப்பை என்றும் காக்க அனைவரையும் முன்வர வேண்டி அழைக்கிறேன்.



### வழங்கிய ஆசிச்செய்தி

**மொடேர்ண் இந்து கலை கலாச்சார நிறுவனர்**
**"சிவாகமவித்வான்"**
**டாக்டர் சிவஸ்ரீ நா சோமாஸ்கந்தகுருக்கள**

இலங்கையில் உள்ள பழமையான விநாயகர் ஆலயங்கள் வரிசையில் உரும்பிராய் - பரத்தைப்புலம் கருணாகர பிள்ளையார் ஆலயமும் ஒன்றாகும் அக்காலத்தில் புகழ்பூத்த அந்தண பெருமகனார் சிவஸ்ரீ கருணாகர குருக்கள் அவர்கள் தம் உபாசனை மூர்த்தியாகிய விநாயபெருமானை ஊரவரும் வழிபட்டு உய்திபெற வேண்டும் என்ற பொதுநலத்தோடு ஆலயத்தை ஸ்தாபித்து கும்பாபிஷேகம் நிகழ்தி நித்திய நைமித்திக வழிபாடுகளையும் செய்து வந்தார் அவரை தொடர்ந்து அவர் வம்சாவளியினர் அப்புண்ய கைங்கர்யத்தை செய்து வந்தனர் தற்போது ஏழாவது தலைமுறையாக சிவஸ்ரீ சபாரத்ன பரமேஸ்வரகுருக்கள் அவர்கள் தமது தலைமையில் விநாயகர் அடியவர்கள் ஆலயதிருப்பணி சபையினர் உதவியுடன் ஆலயத்தை புனரமைத்து வர்ணம் தீட்டி இன்று 29-04-2026 மஹா கும்பாபிஷேகம் நிகழ்த்த திருவருள் துணையுடன் பணிசெய்வதறிந்து மகிழ்ச்சி அடைகின்றோம். கும்பாபிஷேகம் இனிதே நிறைவு கண்டு அனைவரும் விநாயகர் திருவருள் பெற்று நிலமிசை நீடுவாழ பெருமானை பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்



வாக்குண்டாம் நல்ல ...
மாமலராள் நோக்கு...
மேனி நுடங்காது பூக்கொண்...
தும்பிக்கையான் பாதம் தப்பா...



### வாழ்த்துச்...

**மலேசியா இலா...**

"வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும்" உரும்...
ஷேகவிழா நடைபெறவுள்ள இத்தருணத்தில் அக்கோவில் கும்பாபிஷேக...
அடைகிறேன்.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற முதுமொழியின்படி நம...
வருங்காலச் சந்ததியினர்களும் நமது சமய வாழ்வின் நெறிகளைக்கடை...
மிகவும் அவசியம். நமது தமிழர்கள் வாழும் நாடுகள் தோறும் ஆலய வழ...
பெருமையையும் எடுத்துக்காட்டுகின்றன.

நமது சைவசமயத்தில் முதற்பூஜைக்கும் முதல் வழிபாட்டிற்கும் உரியவ...
எக்காரியங்களும் எவ்வித இடையூறுகளுமின்றி சிறப்பாக நிறைவேறு...
வாய்ந்த ஸ்ரீ கருணாகரப் பிள்ளையார் கோவில் அந்தணசிரேஷ்டர்களின...
சிவாச்சார்யார்களாகவும் பணியாற்றிவரும் ஆலயமாகும்.

ஆராய்ச்சியாளர்களின் கூற்றுப்படியும் கல்வெட்டு சாசனப்படியும் இவ்வா...
நம் கோவில் பிரதமகுருக்கள் தமது தந்தையாரைத் தொடர்ந்து கருணா...
பெற்றுள்ளார்.

17.03.2025ல் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு ஆதீனகர்த்தா தலைமையி...
செயலாற்றுகின்றார்கள். எங்கள் பிரதம குருக்கள் சில ஆண்டுகளாக ...
ஆகிய இரண்டு கோவில்களையும் சிறப்பாக நடாத்திவருவதற்கு நாம் உ...
அவருடைய இந்தச் செயற்பாடுகள் அனைத்தும் தமது கடமையின்பா...
தற்போது 29.04.2026ல் நடைபெறும் ஸ்ரீகருணாகரப்பிள்ளையார் கே...
இந்த இரண்டு ஆலயங்களுடைய தமக்குள்ள பொறுப்புக்களை செவ்வே...
சனாசமேத

சண்முகசுப்பிரமணியப் பெருமானும் அவருக்கு திருவருள் புரிய வேண்...
ஸ்ரீ கருணாகரப் பிள்ளையார் கோவில் மஹாகும்பாபிஷேகம் சிறப்பாக ...
வேறு எந்தவகையிலோ ஈடுபட்டிருந்தவர்கள் அனைவருக்கும் ஸ்ரீ கருண...
விநாயகப் பெருமானையும் ஸ்ரீசக்தி வேற்பெருமானையும் ஸ்ரீவள்ள...
வேண்டித்துதித்து குருக்கள் அவர்களையும் வணங்கி எனது வாழ்த்துக்...

### விளம்பர அனு...

**கீர்த்திகா ரெக்ரைல்ஸ்**
பலாலி றோட், உரும்பிராய்ச் சந்தி,
உரும்பிராய்.
T.P : 077 228 8245

**சதா ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்**
பலாலி றோட் உரும்பிராய்
T.P : 021 321 0552

**அன்னை படமாடம்**
கோப்பாய் வீதி, உரும்பிராய்ச் சந்தி.
T.P : 077 798 9145

**சண் நகைத்...**
பலாலி றோட், உ...

**வசந்தன் கிறீம் ஹவுஸ்**
உரும்பிராய்ச் சந்தி, பலாலி வீதி,
T.P : 077 193 6164

**STN மொபைல்ஸ்**
உரும்பிராய்ச் சந்தி.
T.P : 077 440 7013

**சிவசக்தி பல்பொருள்**
விற்பனை நிலையம்,
பலாலி வீதி, உரும்பிராய்ச் சந்தி.

**A.S.T வெல்டி...**
பலாலி றோட், உ...
T.P : 077 2...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ய் - பரத்தைப்புலம்
# ...ணாகரப் பிள்ளையார் கோவில்
# ...ம்பாபிஷேகம்
## ...மை காலை 9.05 மணிமுதல் 10.42 மணிவரை



...ல்ல மனமுண்டாம்
...க்கு உண்டாம்,
...ண்டு துப்பார் திருமேனித்
...தப்பாமல் சார்வார் தமக்கு!

## ...துச் செய்தி

இலங்கைச் சைவர் சங்கம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில்
திரு. கனகரத்தினம்
அருள்ஜோதி AMW
தலைவர்.

...உரும்பிராய் - ஸ்ரீ கருணாகரப் பிள்ளையார் கோவில் மஹாகும்பாபி...ஷேக மலருக்கு வாழ்த்துச்செய்தி கூறிக்கொள்வதில் மிகவும் மகிழ்ச்சி...

...நமது வாழ்வில் ஆலயவழிபாடு மிகவும் பிரதானமானது. எமது ...கடைப்பிடித்து நல்வாழ்வு வாழ்வதற்கு நாம் வழிகாட்டிகளாக இருப்பது ...ய வழிபாடுகள் சிறப்பாக அமைந்திருப்பது எமது சமய வளர்ச்சியையும்...

...ரியவர் விநாயகப்பெருமான். இப்பெருமானை வழிபட்டு ஆரம்பிக்கும் ...வேறும் என்பது எமது நம்பிக்கையும் மரபுமாகும். மிகவும் பழமை ...ளினால் பரம்பரையாக ஆதீன கர்த்தாக்களாகவும் அர்ச்சகர்களாகவும்...

...வ்வாலயம் மிகவும் பழைமை வாய்ந்த ஆலயம் என்பது புலனாகிறது. ...ருணாகரப் பிள்ளையார் கோவில் ஏழாவது ஆதீனகர்த்தாவாகப் பதவி...

...மையில் திருப்பணிச்சபையினர் பல திருப்பணிகளை மேற்கொண்டு ...ாக ஸ்ரீ கருணாகரப் பிள்ளையார் கோவில் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் ...ம் உண்மையில் அவருக்கு பாராட்டுக்களைத் தெரிவிக்க வேண்டும். ...ன்பால் அவருக்கு இருக்கும் பொறுப்புணர்சிகளைக் காட்டுகின்றன. ...ர் கோவில் மஹாகும்பாபிஷேகம் பெரும் பொறுப்பான பணியாகும். ...வ்வனே செய்வதற்கு ஸ்ரீகருணாகரப் பெருமானும் ஸ்ரீவள்ளிதேவ-...

...வண்டும் என்று வேண்டுகின்றோம்.
...பாக நடைபெறுவதுடன் இப்பெருவிழாவோடு நேரடியாகவோ அல்லது ...கருணாகரப் பெருமானுடைய பேரருள் சித்திக்கவேண்டும் என்று ஸ்ரீ ...வள்ளி தேவசேனா சமேத சண்முகசுப்பிரமணியப்பெருமானையும் ...துக்களை வழங்குகின்றேன்.

## வாழ்த்துச் செய்தி



நாகலிங்கம் வேதநாயகன்
ஆளுநர்
வடக்கு மாகாணம்

"நம்பிக்கையுண்டேல நமக்கு
விநாயகன் தும்பிக்கையுண்டே துணை"

ஆலயங்களில் ஆகம விதிப்படியும், சாஸ்திர முறைப்படியும், தெய்வ உருவங்களுக்கு சக்தியையும், கோபுரக் கலசத்தில் உருவேற்றிய சக்தியையும், 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை தெய்வீக சாந்நித்தியம் திருக்கோயிலில் நிறைந்திருக்கும் வண்ணம் மகா கும்பாபிஷேக விழா இடம்பெற்று வருகின்றது. அத் தெய்வீக சக்தி குறைவுபடாதிருக்கவே ஆலயத்தின் நித்திய நைமித்தியக் கிரியைகள் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன. இதன் போது ஆலயத்தில் வீற்றிருக்கும் விக்கிரகங்களுக்கு கும்பத்தில் வைக்கப்பட்ட புனித நீரில், இறைசக்திகளை ஆவாஹனம் செய்து, குறிப்பிட்ட யாகத்தின் மூலம் மந்திர உச்சாடனம் செய்து கும்பத்துக்குள் வரவழைக்கப்பட்ட சக்தியை கடவுள் சிலைகள் மற்றும் ஆலய ராஜகோபுரக் கலசங்களில் நிலையாக இருக்கும்படி அபிஷேகம் செய்யப்படுகிறது இக் கும்பாபிஷேகங்கள் மூலமாகவே ஆலயத்தின் விக்கிரகங்கள் தெய்வ சக்தியைப் பெறுகின்றன. அந்த வகையில், வரலாற்றுப் புகழ் மிக்க யாழ்மாவட்டத்தில் உரும்பிராய்க் கிராமத்தில் மருத நிலம் சூழ்ந்த பரத்தைப்புலம் பதியிலே குடிகொண்டு அருள்புரிந்து வரும் கருணாகரப் பிள்ளையாரின் கும்பாபிஷேக நிகழ்வினையொட்டி வெளியிடப்படும் "மஹா கும்பாபிஷேக" மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிகவும் மனமகிழ்ச்சியடைகின்றேன். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பார் ஆன்றோர் எமது சமயப் பண்பாட்டு மரபுகளைப் பேணி வளர்க்கும் இடமாக விளங்குபவை திருக்கோவில்களே என்பதில் ஐயமில்லை. சிற்பம், ஓவியம், இசை, போன்ற நுட்பமான கலைகள் எல்லாம் காலத்துக்குக் காலம் அழியாமல் பாதுகாத்து வரும் பிரதான பணியில் இத்திருத்தலங்கள் சிறப்பான இடத்தை எடுத்துள்ளன. கும்பாபிஷேகம் என்பது இறைவனின் திருவருளைப் பரவச் செய்யும் புனிதமான பணியாகும். மகா கும்பாபிஷேக காலங்களில் யாக வழிபாடும் வேத மந்திரங்களும் இறையருளை ஆலயத்தில் பிரகாசிக்கச் செய்கின்றனபிள்ளையார் இந்த வகையில் எமையெல்லாம் தனது அதீத சக்தியினால் ஆட்கொண்டு அருள்பாலிக்கும் உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெறும் மாக கும்பாபிஷேகம் சிறப்புற நிகழவும், இக்கும்பாபிஷேகப் பணியைச் சிறப்பாக நிறைவேற்றுவதில் முன்னின்று உழைத்த ஆலய குருக்களுக்கும், ஏனைய சிவாச்சாரியர்களுக்கும் மற்றும் ஆலய அறங்காவலர்களுக்கும் எம்பெருமானின் பேரருள் கிடைக்கவும் கருணாகரப் பிள்ளையாரின் சிறப்புகளையும், பெருமைகளையும் எடுத்தியம்பும் வகையில் வெளியிடப்படும் "மஹா கும்பாபிஷேக மலர்", திருக்கோயில் பண்பாட்டினை மென்மேலும் வளம்பெறச் செய்ய வேண்டும் எனவும் வேண்டி எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



ம.பிரதீபன்,
மாவட்டச் செயலாளர் / அரசாங்க அதிபர்
யாழ்ப்பாண மாவட்டம்.

சைவமும் தமிழும் சிறந்து விளங்கும் உரும்பிராய் மண்ணிலே பரத்தைப்புலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள ஸ்ரீ கருணாகரப் பிள்ளையார் கோவில் மஹாகும்பாபிஷேகமானது பராபவ வருஷம் சித்திரை மாதம் 16ம் நாள் (2026.04.29) இறைவன் திருவருளுடன் நடைபெறவுள்ளமையை ஒட்டி பேருவகை அடைவதுடன், இவ் மஹாகும்பாபிஷேக விழாவை முன்னிட்டு வெளிவரவுள்ள சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். யாழ் நகரிலே பிரசித்தி பெற்று விளங்குகின்ற விநாயகர் ஆலயங்களிலே உரும்பிராய் ஸ்ரீ கருணாகரப் பிள்ளையார் கோவிலும் ஒன்றாகும். இவ் ஆலயம் பற்றிய புராதன கல்வெட்டு ஒன்று இன்றும் இங்கு உள்ளமை ஆலயத்தின் பெருமையை மேலும் பறைசாற்றி நிற்கின்றது. கும்பாபிஷேகங்கள் ஆலய வளர்ச்சியில் ஒரு படித்தளங்களாக அமைகின்றன. அந்த வகையில் பழமையும் பெருமையும் கொண்டு விளங்கும் இவ்வாலயத்தில் இவ்வாண்டு மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவது காலத்தின் தேவையும் விநாயகரின் திருவருளும் ஆகும். இவ் மஹாகும்பாபஷேக விழாவானது ஸ்ரீ கருணாகரப் பெருமானின் அருளாசியுடன் சிறப்புற நடைபெறவும், இதனையொட்டி வெளியிடப் படுகின்ற மஹாகும்பாபிஷேக மலரானது சிறப்பாக வெளிவரவும் எல்லாம் வல்ல விநாயகப் பெருமானைப் பிரார்த்திப்பதுடன், ஆலய ஆதீன கர்த்தா, திருப்பணிச் சபையினர் மற்றும் மலர்க்குழுவுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## வரலாற்றுப் புகழ்மிக்க ஸ்ரீ கருணாகரப்பிள்ளையாரை வணங்குகின்றோம்



தியாகராஜா நிரோஷ்,
தவிசாளர்,
வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்.

எமது வலிகாமம் கிழக்கு புத்தூர் பிரதேசசபை பிரிவிற்குட்பட்ட சரித்திர புகழ் பெற்ற மிகவும் பழமையும் பெருமையும் வாய்ந்த உரும்பிராய் ஸ்ரீ கருணாகரப் பிள்ளையார் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு பெரு மகிழ்வடைகின்றேன். பன்னெடும் காலமாக தொன்று தொட்டு கருணை மழை பொழிந்து அருளாட்சி புரியும் இவ் ஆலயம் மன்னர்களால் புனரமைப்பு செய்யப்பட்டு பூஜிக்கப்பட்ட பெருமை வாய்ந்த ஆலயம் ஆகும். வலிகாமம் கிழக்கின் வரலாற்றை நோக்கும் போது எமது சைவமும் தமிழும் பற்றிய வரலாற்று பின்னணியில் இவ் ஆலயம் முக்கியமாக நோக்கத்தக்கது. இன்றும் இவ் ஆலயம் வரலாற்று பாரம்பரியம் பின்பற்றப்பட்டு நெறிமுறைகளுடன் பரிபாலிக்கப்படுவது சிறப்பம்சமாகும். எமது சமய மாண்பை பறைசாற்றும் வகையிலும் தொன்மையினை எடுத்தியம்பும் வகையிலும் பழமை வாய்ந்த கல்வெட்டுக்களுடன் எம் சமய பாரம்பரியத்தினை இவ்வாலயம் எடுத்தியம்புவது ஈழத்தமிழர்களின் சிறப்புக்கு உரியதொன்றாகும். இவ்வாறு பிரசித்தி பெற்ற அருள் நிரம்பி வழங்கும் எம் பெருமானுக்கு திருப்பணி வேலைகள் யாவும் இனிதே சிறப்பாக சமய ஒழுக்கங்களுடன் நிறைவேறி 29.04.2026 ஆம் திகதி புதன்கிழமை காலை 09.45 மணி முதல் 10.42 மணி வரை சுப முகூர்த்த வேளையில் மஹா கும்பாபிஷேகம் இறைவனின் துணையுடன் இனிதே நிறைவேற உள்ளது. இதற்காக உழைத்த சகலருக்கும் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர் என்ற வகையில் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆலயத்தின் வளர்ச்சியில் பிரதேச சபையும் மக்கள் பிரதிநிதிகளும் உத்தியோகத்தர்களும் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம். எல்லாம் வல்ல எம் பெருமான் கருணாகர பிள்ளையாரின் பரிபூரண அருள் அனைவரின் வாழ்க்கையிலும் நிறைந்து நல்லெண்ணம் மற்றும் நல்வாழ்வும் எப்போதும் நிலைத்திருக்கட்டும். மேலும் இப் புனித நிகழ்வைக்காண வரும் பக்தர்களுக்கும் இப்பிரதேச ஊர் மக்களுக்கும் ஆனந்தம் அமைதி மற்றும் வளங்களையும் பெறவதற்கு எல்லாம் வல்ல பெருமான் கருணை பொழியட்டும் என வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

## வாழ்த்துச் செய்தி



ஈ.தயாரூபன்
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம், கோப்பாய்.

உரும்பிராய் ஸ்ரீ கருணாகரப் பிள்ளையார் ஆலயம்

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற ஔவையின் வாக்கிற்கு இணங்க சிவபூமி என திருமூலநாயனாரால் புகழப்பட்ட ஈழமணித் திருநாட்டின் சிரசென விளங்கும் யாழ்ப்பாணத்தில் பசுமை மிகு தோட்டங்களும் பல்வேறுபட்ட வளங்களும் அமையப் பெற்ற உரும்பிராயில் மூன்று ஆலயங்கள் இணைந்து அமையப் பெற்றமையால் மூன்று கோயிலடி எனச் சிறப்பிக்கப்படும் பரத்தைப் புலம் என்னும் பகுதியில் முதல் வணக்கத்திற்குரிய தெய்வமாக விளங்கும் விநாயகப் பெருமான் அருள்பாலிக்கும் பழமையும் பெருமையும் மிகுந்த சரித்திரப் பிரசித்தி பெற்ற ஸ்ரீ கருணாகரப் பிள்ளையார் ஆலயத்தின் மஹாகும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இவ் ஆலயத்தில் 1910 ஆம் ஆண்டு முதன் முதலாக மகோற்சவ விழா ஆரம்பிக்கப்பட்டது. இவ் ஆலயச் சிறப்புக்களைப் பற்றி புலவர்கள், அறிஞர்கள் கூறியுள்ளனர். அந்தவகையில் முதலியார் இராஜநாயகம் அவர்கள் எழுதிய யாழ்ப்பாண வரலாற்று நூலில் இவ் ஆலயத்தில் கிபி 1567 ஆம் ஆண்டு கல்வெட்டு ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். இக் கல்வெட்டும் இவ் ஆலயமும் மிகவும் பழமை வாய்ந்ததாக இன்றும் காணக்கூடியதாகவுள்ளது.

விக்கினங்களை களைந்து சகல சித்திகளையும் நல்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க விநாயகப் பெருமானின் மஹாகும்பாபிஷேகத்தை முன்னிட்டு வெளிவரும் மலர் வெளியீடு சிறப்புறவும் இவ் ஆலய கும்பாபிஷேக நன்னாளில் அனைவரும் விநாயகப் பெருமானின் திருவருளாலே இஷ்டசித்திகளைப் பெற்று இன்புற்று வாழ எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி நிற்கின்றேன்


## ...னுசரணை

...கத்தொழிலகம்
... உரும்பிராய்ச் சந்தி.

உதயன் பான்சி
பலாலி றோட், உரும்பிராய்ச் சந்தி.
T.P : 075 901 5884

ரூபன் களஞ்சியம்
பலாலி றோட், உரும்பிராய்ச் சந்தி.

திருப்பணிச் சபையினர்

...ங் வேர் சொப்
உரும்பிராய்ச் சந்தி.
...77 202 2814

அபி கராஜ் அன்ட் சேர்விஸ்
பலாலி றோட், உரும்பிராய்ச் சந்தி.
T.P : 077 662 2167

மணியம் மல்ரிரேடர்ஸ்
உரும்பிராய்ச் சந்தி.
T.P : 077 274 0883




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பசுமை இயக்கத்தின் 2025-விருது வழங்கல்



தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின், 2025 ஆம் ஆண்டுக்கான பசுமை அமைதி விருதுகள் வழங்கும் நிகழ்வு, யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் கடந்த வாரம் இடம்பெற்றது.

நிகழ்வில் மாணவர்களிடையே அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட சூழல் பொது அறிவுப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களில் முதல் 250 மாணவர்கள் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இவர்களில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற வெற்றியாளர்களுக்குச் சூழலியல் ஆசான் க. சி. குகதாசன் ஞாபகார்த்தப் பசுமை அமைதி விருதுகள் வழங்கப்பட்டன. முதலாம் இடத்தைப் பெற்ற சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த மாணவி டிலுக்ஷிகா மதிவதனன் ஒரு பவுண் எடையுள்ள தங்கப்பதக்கமும், இரண்டாம் இடத்தைப் பெற்ற மட்டக்களப்பு வின்சென்ற் மகளிர் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த மாணவி டிலுக்ஷினி டன்ஸ்ரன் வெள்ளிப்பதக்கமும், மூன்றாம் இடத்தைப் பெற்ற சுண்டுக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மாணவி ரம்யா ரமேஷ், மட்டக்களப்பு சென். ஜோசப் கல்லூரி மாணவன் அன்ரனி கிங்சிலி யனுசன், மன்னார் டி லா சால் கல்லூரி மாணவன் கிறிஸ்துராசா அன்ரனி டிலைக்சன் ஆகிய மூவரும் வெண்கலப்பதக்கங்களையும் பெற்றுக் கொண்டனர். தாலகாவலர் மு. க. கனகராசா ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டு வரும் சிறந்த சூழல்நேயச் செயற்பாட்டாளருக்கான விருதை சிவகுமாரன் நிரோசன் பெற்றிருந்தார். இவருக்கு ஒரு லட்சம் ரூபா பணப்பரிசு வழங்கப்பட்டது. அத்துடன் மாணவர்களிடையே நடாத்தப்பட்ட வீட்டுத்தோட்டப் போட்டி, தாவரங்களை அடையாளம் காணும் போட்டியில் வெற்றி பெற்றவர்கள் சான்றிதழ்கள், பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர். திருநாவுக்கரசு வேல்நம்பி, கிழக்கு மாகாணக் கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் மருத்துவர் மு.அ.முகமது சுல்பீக்கர் அபூபக்கர், இயற்கைவழிச் செயற்பாட்டாளர் சி.சுந்தரேசுவரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (கு-66)


## மரண அறிவித்தல்

பிறப்பு 24 . 08 . 1945



இறப்பு 28 . 04 . 2026

## கந்தசாமி மகேஸ்வரி

கச்சாய் வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், வெள்ளாம் போக்கட்டி, புளியம்பொக்கணை, பளை ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி மகேஸ்வரி அவர்கள் நேற்று (28.04.2026) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகளும், திரு. திருமதி பொன்னையா தம்பதியரின் அருமை மருமகளும், காலஞ்சென்ற கந்தசாமி அவர்களின் அன்பு மனைவியும், குகதாசன் (மாவட்டக் கணக்காய்வு உத்தியோகத்தர் மாகாணக் கணக்காய்வு அலுவலகம், முல்லைத்தீவு), காலஞ்சென்ற யோகதாசன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சர்மிளாவின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், குலசேகரம், வேலாயுதபிள்ளை, தில்லைநாயகி மற்றும் சரஸ்வதி, பரமசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சோதுஷன் (முகாமைத்துவபீடம், 3ம் வருடம், யாழ் பல்கலைக்கழகம்), லவீனா ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும், காலஞ்சென்ற மனோகரன் அவர்களின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29-04-2026) புதன்கிழமை காலை 08.00 மணியளவில் முல்லையடி வீதி பளையில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மலயான்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
முல்லை வீதி, பளை
குகதாசன் (குகன்) - 077 074 2725
மகன் - 074 237 2725

(CR/47455) J-1

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 22 . 01 . 1942



இறைவன் அடியில் 27 . 04 . 2026

## திருமதி பரமேஸ்வரி கதிர்காமர்

மீசாலை வடக்கு, கொடிகாமத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பரமேஸ்வரி கதிர்காமர் அவர்கள் கடந்த (27.04.2026) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கதிர்காமரின் அன்பு மனைவியும், சதாசிவம் (கனடா), காலஞ்சென்றவர்களான சிதம்பரம், சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயக்குமார் (கனடா), உதயகுமார் (ஜேர்மனி), குமாரிலதா (ஜேர்மனி), சந்திரகுமார் (நோர்வே), ராஜ்குமார் (ஆசிரியர் யா/கட்டைவேலியார்க்கரு நாயகர் வித்தியாலயம்), புஸ்பலதா (ஆசிரியை யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை), ரகுமார் (உப அதிபர் யா/எழுதுமட்டுவாழ் அ.த.க பாடசாலை), விஜயலதா (ஆசிரியை யா/அல்லாரை அ.த.க பாடசாலை), எந்திரி திருக்குமார் (பிரதம பொறியியலாளர் மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம்), ஆகியோரின் அன்புத் தாயாரும், சுசீலாம்பாள் (கனடா), புஸ்பராஜேஸ்வரி (ஜேர்மனி), சச்சிதானந்தம் (ஜேர்மனி), கேதீஸ்வரி (நோர்வே), வாமினி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சுகாதார அமைச்சு), தயாபரன், நந்தினி (ஆசிரியை யா/மிருசுவில் அ.த.க பாடசாலை), காலஞ்சென்ற ஜெயகாந்தன் (ஓய்வுநிலை அதிபர் யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி), தர்ஷினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் மாநகரசபை யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், கீர்த்தனா, யானு (கனடா), நதீனா, கிஷோர், ரதீஸ், தீபகன், பிரகாஸ் (ஜேர்மனி), தர்மீரா, அபிரா (நோர்வே), தர்விகன், விவேகா, லதீசனா, டுஷானா, கோசிகா, கோசிகன், லக்ஷனன், விபுசனா, கவின்ராம், பவிஷ்னா, ஷர்வினா, கீர்த்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜஸ்னா, மகிழன், வானவி ஆகியோரின் அன்பு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.04.2026) வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
மீசாலை வடக்கு, கொடிகாமம்
தொடர்புகளுக்கு:-
எந்திரி க.திருக்குமார் (மகன்) - 077 762 8420

(CR/47454) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.media

விதைத்தவன்
உறங்கிளாலும்
விதைகள் ஒருபோதும்
உறங்குவதில்லை
– சே.குவாரா

# புதன் பொய்கை

29.04.2026
புதன்கிழமை




# அஸ்பெஸ்ரஸ் கூரைத்தகடுகள்;

பா. துவாரகன் B.Sc.

அஸ்பெஸ்ரஸ் (Asbestos/கல்நார்) என்பது கட்டுமானத்துறையில் பரவலாகப் பயன்படுத்தப்படும் நார்த்தன்மையான தாதுக்களின் தொகுப்பாகும். இலங்கையில் அஸ்பெஸ்ரஸ் கட்டுமானத் துறையில் வணிக ரீதியிலும் வீட்டுப் பயன்பாட்டிலும் மிகவும் பரவலாகப் பயன்படுத்தப்படும் ஒரு பொருளாகும். குறிப்பாகக் கூரைத்தகடுகள், சீலிங் சீற்றுகள் மற்றும் பிரிப்புச் சுவர்கள் ஆகியவற்றில் அஸ்பெஸ்ரஸ் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

## அமைதியான அபாயம்

அதன் வலிமை, இலகுவான தன்மை மற்றும் குறைந்த செலவு காரணமாக கட்ட நிர்மாணத்தில் பல்வேறு தேவைகளுக்கு இது பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

இது மனிதர்களுக்கு தீவிரமான சுகாதாரப் பாதிப்புகளை குறிப்பாக புற்றுநோய்களை ஏற்படுத்தும் முக்கியமான காரணியாக அறிவியல் ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது. உலக சுகாதார நிறுவனம் (WHO) மற்றும் (தேசிய கல்வி நிறுவகம்அமெரிக்கா) ஆகியவை அஸ்பெஸ்ரஸ் அனைத்துவகைகளும் புற்றுநோயை உண்டாக்கும் என உறுதிப்படுத்துகின்றன. உலகின் பல நாடுகளில் இதன் பயன்பாடு தடைசெய்யப்பட்டுள்ளது. அஸ்பெரஸ் பாதிப்பு, நோயியல்பு, தொடர்புடைய புற்றுநோய்கள், அபாய காரணிகள் மற்றும் தடுப்பு முறைகள் குறித்து விமர்சன ரீதியாக இங்கு பார்ப்போம்.

அஸ்பெஸ்ரஸ் பல தசாப்தங்களாக கட்டடப்பொருள்களில், குறிப்பாக கூரைத்தகடுகளில் பயன்படுத்தப்பட்டுவருகிறது. அதன் வெப்பத்தடைத் திறன், நீடித்ததன்மை மற்றும் குறைந்த செலவு காரணமாக இது பயன்பாட்டில் உள்ளது. எனினும், புற்றுநோய் ஆராய்ச்சிக்கான சர்வதேச நிறுவனம் (International Agency for Research on Cancer) அஸ்பெஸ்ரஸை மனிதர்களுக்கு உறுதியான புற்றுநோய் காரணி (Group 1 carcinogen) என வகைப்படுத்தியுள்ளது. அஸ்பெஸ்ரஸ் பல நாடுகளில் தடை செய்யப்பட்டாலும், இலங்யையில் இது இன்னும் பயன்பாட்டில் உள்ளது.

### நோயியல்பு

அஸ்பெஸ்ரஸ் நார்கள் காற்றில் பரவி சுவாசத்தின் மூலம் நுரையீரலுக்குள் நுழைகின்றன. இந்நுண்ணிய நார்கள் திசுக்களில் நீண்டகாலம் தங்கி,

- நீடித்த அழற்சி (chronic inflammation)
- நார்த்திசு உருவாக்கம் (fibrosis)
- DNA சேதம்

என பல மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. இதன் விளைவாக 'செல்கள்' கட்டுப்பாடற்ற வளர்ச்சி அடைந்து புற்றுநோயாக மாறுகின்றன. அஸ்பெஸ்ரஸ் தொடர்பான நோய்களுக்கு 2050 ஆண்டுகள் வரை நீண்ட செயற்படாக் காலம் (latency period) காணப்படுவதால் இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் அஸ்பெஸ்ரஸ் அபாயம் தொடர்பில் போதிய விழிப்புணர்வு இல்லை.

### அஸ்பெஸ்ரஸ் தொடர்புடைய புற்றுநோய்கள்

- மெசோதெலியோமா (Mesothelioma): நுரையீரல் அல்லது வயிற்றுப் பகுதியை மூடியிருக்கும் mesotheliumஇல் உருவாகும் அரிதான ஆனால் தீவிரமான புற்றுநோய்
- நுரையீரல் புற்றுநோய் (Lung Cancer): புகைப்பிடித்தலுடன் இணைந்தால் அபாயம் பல மடங்கு அதிகரிக்கும்
- பிற புற்றுநோய்கள்: குரல்வளை (larynx), சூலகம் (ovary)

### அபாயக் காரணிகள்

- சேதமடைந்த அல்லது சிதைந்த அஸ்பெஸ்ரஸ் கூரைத் தகடுகள்
- கட்டடப் புதுப்பிப்பு / இடிப்பு பணிகள்
- தொழில்சார் பாதிப்பு (occupational exposure)
- புகைப்பிடிப்போருக்கு அபாயம் அதிகம் (synergistic effect)

### தடுப்பு மற்றும் கட்டுப்பாடு

- அஸ்பெஸ்ரஸ் பொருள்களை நேரடியாகக் கையாளாமல் தவிர்க்கவேண்டும்.
- சேதமடைந்த பொருள்களுக்கு நிபுணர் மதிப்பீடு அவசியம்
- அகற்றும் பணிகள் பயிற்சி பெற்ற நிபுணர்களால் மட்டுமே செயற்படல் வேண்டும்.
- மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபையின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றுதல் அவசியம்.
- உலக சுகாதார நிறுவனம், அஸ்பெஸ்ரஸுக்கு 'பாதுகாப்பான அளவு' என எதுவும் இல்லை; மிகக் குறைந்த அளவிலான வெளிப்பாடும் உடல்நலத்திற்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடும் என்கிறது.

### வீட்டு நிலை அபாய மதிப்பீடு

- குறைந்த அபாயம்: சேதமில்லாத தகடுகள் கண்காணிப்பு
- மிதமான அபாயம்: சிறிய பிளவுகள் நிபுணர் ஆலோசனை
- அதிக அபாயம்: சிதைவு / தூசி வெளியேற்றம் உடனடி பாதுகாப்பு நடவடிக்கை

அஸ்பெஸ்ரஸ் இல்லாத மாற்று கூரைத்தகடுகள் (Alternatives) அஸ்பெஸ்ரஸுக்கு மாற்றாக, கீழ்க்காணும் பொருள்கள் பயன்படுத்தப்படுகின்றன:

- பைபர் சிமெந்துத்தகடுகள் (Nonasbestos)
- செல்லுலோஸ் இழை (Cellulose fiber)
- செயற்கை இழைகள் (Synthetic Fibers)

### அஸ்பெஸ்ரஸ் இல்லாத தகடுகளின் நன்மைகள்

- புற்றுநோய் அபாயமற்றது
- வெப்பக் கட்டுப்பாடு மேம்பாடு
- மழைச்சத்தம் குறைப்பு
- நீடித்த பயன்பாடு மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பு இன்மை

அஸ்பெஸ்ரஸ் இலங்கையில் இன்னும் முக்கியமான சுற்றுச்சூழல் மற்றும் பொதுச்சுகாதார சவாலாக உள்ளது. அதன் நீண்டகால விளைவுகள் மற்றும் மறைமுக பாதிப்புகள் காரணமாக, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அவசியமானவை. பொதுமக்கள் விழிப்புணர்வு, கட்டுப்பாட்டுச் சட்டங்கள் மற்றும் பாதுகாப்பான மாற்றுப் பொருள்களின் பயன்பாடு மூலம் அஸ்பெஸ்ரஸ் தொடர்பான நோய்களைக் கணிசமாகக் குறைக்கமுடியும்.

### மேற்கோள்கள் :

**1.** World Health Organization. Asbestos: elimination of asbestosrelated diseases. Geneva: WHO; 2023.
**2.** International Agency for Research on Cancer. Arsenic, metals, fibres and dusts. IARC Monogr Eval Carcinog Risks Hum. Lyon: IARC; 2012.
**3.** National Cancer Institute. Asbestos exposure and cancer risk. Bethesda (MD): NCI; 2022.
**4.** Centers for Disease Control and Prevention. Asbestos and health effects. Atlanta: CDC; 2023.
**5.** Stayner L, Welch LS, Lemen R. The worldwide pandemic of asbestosrelated diseases. Annu Rev Public Health. 2013;34:205-16.
**6.** KazanAllen L. Asbestos and mesothelioma: worldwide trends. Lung Cancer. 2005;49(S1):S3-S8.
**7.** Central Environmental Authority. Guidelines on asbestos management in Sri Lanka. Colombo: CEA; latest edition.
**8.** Sisira Kumara. Asbestos - The Hidden Silent Killer in Your Home, The Sri Lankan Scientist

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# செயற்கை நுண்ணறிவும் சமுதாயமும்



கடந்த வாரத்தின் தொடர்ச்சி.........




கலாநிதி மகேந்திரராஜா பிரவீணன், அடிலெய்ட் பல்கலைக்கழகத்தில் கணினி அமைப்பியல் பொறியியல் துறையில் பட்டப் படிப்பை முதல்தர சித்தியுடன் நிறைவு செய்தார். அதன் பின்னர், மென்பொருள் பொறியியலாளராக தொழிற்றுறையில் குறுகிய காலம் பணியாற்றிய அவர், 2010ஆம் ஆண்டு சிட்னி பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பப் பள்ளியில் சிக்கலான வலையமைப்புப் பகுப்பாய்வுத்துறையில் கலாநிதிப் பட்டத்தை பெற்றார். கணிப்பொறி தொற்றுநோயியல் ஆராய்ச்சி கல்வியியாளரான பிரவீணன் தற்போது சிட்னி பல்கலைக்கழகத்தில் கணினிப் பொறியியல் துறையின் இணைப் பேராசிரியராகக் கடமையாற்றுகின்றார்.

● கலாநிதி மகேந்திரராஜா பிரவீணன்


## செயற்கை நுண்ணறிவின் தோற்றமும் வரலாறும்-புலனறிதலும் பொறிச் செயலும்

செயற்கை நுண்ணறிவின் ஆரம்பகால வெற்றிகளுக்குப் பிறகு, மனித மட்ட நுண்ணறிவை விரைவிலேயே இயந்திரங்களில் உருவாக்கமுடியும் என்று பெரியதோர் நம்பிக்கை நிலவியது. அக்காலத்தில் பல முக்கியமான ஆய்வாளர்கள் மிகவும் பெரிய எதிர்பார்ப்புகளை முன்வைத்தனர். Herbert Simon மற்றும் Allen Newell ஆகியோர், பத்து ஆண்டுகளுக்குள் ஒரு கணனி உலகச் சதுரங்க சாம்பியனாக மாறும் என்றும், முக்கியமான கணிதத் தேற்றங்களை நிரூபிக்கும் என்றும் கூறினர். பின்னர் Simon, இருபது ஆண்டுகளுக்குள் மனிதன் செய்யும் எந்த வேலையையும் இயந்திரங்கள் செய்யக்கூடியதாக இருக்கும் எனவும் சொன்னார். Marvin Minsky கூட, ஒரு தலைமுறைக்குள் செயற்கை நுண்ணறிவின் முக்கியமான பிரச்சினைகள் பெருமளவில் தீர்ந்துவிடும் எனக் கணித்தார். இத்தகைய கூற்றுகள் அக்காலத்தில் இவ்விடயத்தில் இருந்த நேர்ச்சிந்தனையின் அளவை நமக்குக் காட்டுகின்றன. குறிப்பாக symbolic reasoning முறைகளில் ஏற்பட்ட முன்னேற்றங்கள், பொதுவான செயற்கை நுண்ணறிவும் விரைவில் சாத்தியமாகிவிடும் என்ற எண்ணத்தைப் பலப்படுத்தின. ஆனால் இந்த எதிர்பார்ப்புகள் மிகையாகவே அமைந்தன என்று காலம் சொல்லியது. 1970களின் நடுப்பகுதிக்குள், செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சி பல வரம்புகளை எதிர்கொண்டது. இதன் விளைவாகவே முதல் AI குளிர்காலம் (1974-1980) ஏற்பட்டது. இதற்கான காரணங்கள் தொழில்நுட்ப ரீதியிலும் கருத்தியல் ரீதியிலும் இருந்தன.

கணணிகளின் கணிப்பீட்டுத் திறன் குறைவு, நினைவாற்றல் குறைவு, மந்தமான செயலாக்க வேகம் போன்றவை நடைமுறைப் பயன்பாடுகளைப் பெரிதும் கட்டுப்படுத்தின. பல அணுகுமுறைகள் combinatorial explosion என்ற பிரச்சினையில் சிக்கிக் கொண்டதால் அதாவது சிறிய பிரச்சினைகளுக்கான தீர்வுகளை அதே போன்ற ஆனால் பெரிய பிரச்சினைகளுக்கு விரிவாக்கம் செய்ய முடியாமல் போனதால் எளிமையான விளையாட்டுப் பிரச்சினைகள் (toy problems) என்பதைக் கடந்த நிஜ உலகச்சூழல்களுக்கு விரிவடைய முடியவில்லை. அதற்கும் மேலாக, உலகைப் பற்றிய பொது அறிவு (commonsense knowledge) ஐ AI முறைகளில் சேர்ப்பது மிகவும் கடினமாக இருந்தது. இதனால், AI ஆராய்ச்சிக்கு நிதி வழங்கிய அமைப்புகள் ஏமாற்றமடைந்து, தங்களின் ஆதரவைக் கணிசமாகக் குறைத்தன. இந்தக் காலகட்டத்தில்தான், இன்று Moravec's paradox என அழைக்கப்படும் ஒரு முக்கியமான முரண்நிலை தெளிவாக உணரப்பட்டது. இது அக்காலத்தில் மட்டும் இருந்த ஒன்று அல்ல; ஆனால் அப்போது தான் அது வெளிப்படையாகப் புரிந்துகொள்ளப்பட்டது. இந்த paradoxஇன் மையக்கருத்து என்னவென்றால், மனிதர்கள் மிகவும் கடினமானதாக நினைக்கும் சில பணிகள் —உதாரணமாகச் சதுரங்கம் விளையாடுதல், கணிதப் பிரச்சினைகளைத் தீர்த்தல், அல்லது logic அடிப்படையிலான reasoning—கணனிகளுக்கு ஒப்பீட்டளவில் எளிதாக இருக்கலாம்.

ஆனால் மனிதர்களுக்கு மிக இயல்பாகவும் சாதாரணமாகவும் தோன்றும் புலனறிதல் (perception) மற்றும் sensorimotor coordination சார்ந்த பணிகள்—உதாரணமாகப் பொருளை அடையாளம் காணுதல், அவற்றின் தூரத்தை மதிப்பிடுதல், நகரும் சூழலில் நகர்தல், ஒரு பொருளைப் பிடித்தல் போன்றவை —கணனிகளுக்கு மிகவும் கடினமானவை. இதுவே நுண்ணறிவு பற்றிய நமது உடனடி உள்ளுணர்வு எப்போதும் சரியாக இருக்காது என்பதைக் காட்டியது. Moravec's paradoxஐ ஆழமாகப் புரிந்துகொள்ள, மனித மூளையின் அமைப்பைப் பற்றிச் சிறிது சிந்திக்க வேண்டும். மனித மூளையில் prefrontal cortex என்பது உயர்நிலை reasoning, திட்டமிடல், abstract thinking போன்ற செயல்களுடன் தொடர்புடைய பகுதி. ஆனால் மனித மூளையின் பெரும்பகுதி அதற்காக மட்டும் ஒதுக்கப்படவில்லை. perception, motor control, sensory integration, emotional processing, balance, coordination, auditory processing, visual processing போன்ற பல அடிப்படைச் செயற்பாடுகளுக்கே பெரும் அளவு மூளை அமைப்புப் பயன்படுத்தப்படுகிறது.

இவை நமக்குப் பார்த்தால் 'சாதாரணமான' அல்லது 'எளிய' திறன்களாகத் தோன்றலாம். ஆனால் உண்மையில் அவை மிகச் சிக்கலான நரம்பியல் செயல்முறைகளின் விளைவுகள். ஒரு ஆதிகால மனிதன் வேட்டையாடுதல், சத்தத்தை உணர்தல், அபாயத்தை அடையாளம் காணுதல், ஓடுதல், கையை நீட்டி ஒரு பொருளைப் பிடித்தல், மற்றவரின் முகபாவனை அல்லது நோக்கத்தை உணர்தல் போன்ற செயல்களைச் செய்ய வேண்டியிருந்தது. அதேபோல மனிதனுக்கு முன்பே இருந்த விலங்குகளும்— நாய், பூனை, சிங்கம், பறவை—இத்தகைய செயல்களை அசாதாரண துல்லியத்துடன் செய்து வந்தன. இத்திறன் களைக் கூர்ப்பு (evolution) கோடிக்கணக்கான ஆண்டுகளாக மெதுவாக வளர்த்தெடுத்துள்ளது. அதனால் இவை வெளிப்படையாக எளிமையாகத் தெரிந்தாலும், reverseengineer செய்வது மிகவும் கடினம். இதிலிருந்து ஒரு முக்கியமான புரிதல் கிடைக்கிறது. மனிதர்களுக்கு மிகவும் எளிதாகத் தோன்றும் பல செயல்கள், கணினி ரீதியில் மிகவும் கடினமானவை. மனிதர்களுக்குக் கடினமாகத் தோன்றும் சில செயல்கள், கணினி ரீதியில் ஒப்பீட்டளவில் எளிதானவை. ஒரு சிறு குழந்தைக்கே ஓடமுடியும், ஒரு பந்தை நோக்கிக் கையை நீட்டமுடியும், ஒரு முகத்தை அடையாளம் காணமுடியும், ஒரு சத்தம் எந்தத் திசையிலிருந்து வருகிறது என்பதை உணரமுடியும். ஒரு விலங்குக்குத் தூரத்தவும், தாவவும், பிடிக்கவும், வாசனையை உணரவும் முடியும்.

நமக்கு இவை சாதாரண திறன்களாகத் தெரிகின்றன, ஏனெனில் இவை நம்மிடம் இயல்பாகவே உள்ளன. ஆனால் இவற்றின் பின்னால் பார்வைத் தகவல், கேள்வித் தகவல், உடலின் சமநிலை, தசை இயக்கம், சூழலின் மாறுபாடு, உடனடி முடிவெடுத்தல் போன்ற பல அடுக்குகள் ஒன்றாக வேலை செய்கின்றன.

இதுவே Moravec's paradoxஇன் மையம். மனிதர்கள் 'புத்திசாலித்தனமான' வேலை என்று நினைக்கும் பல விஷயங்களை AI ஆரம்பத்திலேயே செய்யத் தொடங்கியது; ஆனால் மனிதர்கள் மிகவும் சாதாரணமாக எடுத்துக்கொள்ளும் embodied திறன்களை உருவாக்குவது மிகவும் கடினமாக இருந்தது. இந்த முரண்நிலை தெளிவாகப் புரிந்தபின், 'புலனறிதலும் பொறிச் செயலும்' பகுதியில் (perception and actuation) அதிக கவனம் செலுத்தும் ஓர் அணுகுமுறை வளரத் தொடங்கியது. குறிப்பாக robotics மற்றும் embodied AI துறைகளில். reasoningஐ மட்டும் மையமாக வைத்து முன்னேறுவதற்குப் பதிலாக, விலங்குகள் போலச் சூழலை உணரவும் அதில் துல்லியமாகச் செயற்படவும் கூடிய அமைப்புகளை உருவாக்கவேண்டும் என்ற சிந்தனை வலுத்தது. இதன் பின்னணியில் computer vision, auditory processing, sensor fusion, robotic control systems போன்ற துறைகள் முன்னேறின. உதாரணமாக, ஒரு robot ஒரு பந்தைப் பிடிக்கவேண்டுமென்றால் அது வெறுமனே 'பந்து' என்பதைத் தெரிந்திருக்க வேண்டும் என்பதல்ல; image processing மூலம் பொருளை அடையாளம் காணவேண்டும், அது எங்கே உள்ளது என்பதைக் கணிக்க வேண்டும், அது அடுத்த நொடியில் எங்கே இருக்கும் என்பதை முன்கூட்டியே கணக்கிட வேண்டும், அதன் mechanical armஐ சரியான நேரத்தில் சரியான திசையில் இயக்கவேண்டும், பின்னூட்டல் (feedback) அடிப்படையில் தன் இயக்கத்தைத் திருத்திக் கொள்ளவும் வேண்டும்.

இதுபோன்ற perception மற்றும் actuation சார்ந்த பிரச்சினைகள்தான், Moravec's paradox காட்டிய சிக்கல்களுக்கு நேரடியான பதிலாக AI ஆராய்ச்சியில் முக்கியத்துவம் பெறத் தொடங்கின. இதேவேளை, இதற்குப் பரலலாக, 1980களில் expert systems என்பவை செயற்கை நுண்ணறிவின் இன்னொரு முக்கியமான திசையாக உருவெடுத்தன. இவை Moravec's paradoxக்கு நேரடிப் பதிலாக அமையவில்லை; மாறாக, மனித நிபுணர்களின் முடிவெடுக்கும் திறனை குறிப்பிட்ட துறைகளில் பிரதி செய்யும் ஒரு நடைமுறை முயற்சியாக இருந்தன. இந்த அமைப்புகளில், domain knowledge என்பது if-then விதிகளாக ஒரு அறிவுத்தளம் (knowledge base இல் சேமிக்கப்படும்; பின்னர் inference engine அந்த விதிகளைப் பயன்படுத்தி முடிவுகள் தரும். medical diagnosis, engineering design, resource planning, scientific analysis போன்ற பல துறைகளில் இத்தகைய systems பயன்படுத்தப்பட்டன. DENDRAL என்ற அமைப்பு chemical structures பற்றி inference செய்ய உதவியது; MYCIN போன்ற systems மருத்துவ diagnosisஇல் பயன்பட்டன. இவற்றின் பலம் என்னவென்றால், ஒரு முடிவு எவ்வாறு வந்தது என்பதை விளக்க முடியும், realtimeஇல் வேலை செய்ய முடியும், மனித நிபுணத்துவத்தைப் பலருக்கும் மலிவாகக் கொண்டு செல்ல முடியும்.

ஆனால் வரம்புகளும் இருந்தன. இவை பெரும்பாலும் domainspecific; scale up செய்வது கடினம்; அறிவை விதிகளாக உள்ளிடுவதற்கு knowledge engineering மிக அதிக உழைப்பைத் தேவைப்படுத்தும்; அதைவிட முக்கியமாக, இவற்றில் உண்மையான 'கற்றல்' அல்லது ஆழமான பொது அறிவு reasoning இல்லை. Cyc project போன்ற பெரிய முயற்சிகள் கூட, மனிதர்களிடம் இயல்பாக இருக்கும் உலக அறிவை முழுமையாகக் குறியீடாக்குவது எவ்வளவு கடினம் என்பதை வெளிப்படுத்தின. இறுதியாக, இந்த வளர்ச்சிகளுடன் இணைந்து வரும் நெறிமுறைச் சிக்கல்களையும் வலியுறுத்தவேண்டும்.

perception மற்றும் actuation உடைய AI அமைப்புகள் privacy மற்றும் surveillance தொடர்பான கேள்விகளைத் தவிர்க்க முடியாமல் எழுப்புகின்றன. cameras, microphones, மற்றும் பிற புலன்கள் மூலம் மனிதர்களின் செயல்பாடுகள் அவர்கள் தெளிவான அனுமதி இல்லாமலேயே கண்காணிக்கப்படலாம். அதேபோல் கோடல் (bias) மற்றும் நியாயத் தன்மை (fairness) பற்றிய சிக்கல்கள் மிகவும் முக்கியமானவை; குறிப்பாக facial recognition அல்லது voice recognition systems சில மக்கள் குழுக்களிடம் துல்லியமாகச் செயல்படாமல் போகலாம். பொறுப்புக்கூறல் (accountability) மற்றும் வெளிப்படைத்தன்மை (transparency) ஆகியவையும் இங்கு அத்தியாவசியம். குறிப்பாக autonomous vehicles அல்லது military systems போன்ற உயர் அபாயச் சூழல்களில். மேலும் security மற்றும் safety பிரச்சினைகள், வேலைவாய்ப்பு மீதான automationஇன் தாக்கம், law enforcement மற்றும் military பயன்பாடுகள், informed consent இல்லாமல் தரவு சேகரித்தல் போன்ற கேள்விகளும் இத்துறையோடு பின்னிப்பிணைந்துள்ளன. ஆகவே, இவ்வகை AI அமைப்புகளை Page 3 of 3 உருவாக்கும்போது தொழில்நுட்பத் திறன் மட்டும் போதாது; அதனுடன் நெறிமுறை வழிகாட்டுதல்கள், சட்ட ரீதியான பாதுகாப்புகள், மற்றும் உறுதியான மனித மேற்பார்வையும் அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பசுமையை இருளாக்கும் பாதீனியம்





கில்டா தேவராசா

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இன்று மிக வேகமாகப் பரவி வரும் ஒரு ஆக்கிரமிப்புத் தாவரம் பாதீனியம். தொடக்கத்தில் சாதாரணக் களைச் செடியாகக் கருதப்பட்ட இது, இன்று மனித ஆரோக்கியம், விவசாயம் மற்றும் நாட்டின் பல்லுயிர்த் தன்மைக்கு விடுக்கப்பட்டுள்ள பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. இந்தத் தாவரம் இலங்கைக்குச் சொந்தமான தாவரமல்ல. இதன் வருகை குறித்த ஆய்வுகள் இரண்டு இரு வேறு ரீதியில் ஆராயப்படுகின்றன.

**இராணுவ வாகனங்களின் வருகை**

1980களின் பிற்பகுதியில் இலங்கைக்கு வந்த இந்திய அமைதி காக்கும் படையினரின் வாகனங்களின் ரயர்கள் மற்றும் அவர்களது உபகரணங்களுடன் இச்செடியின் விதைகள் ஒட்டிக்கொண்டு யாழ்ப்பாணத்திற்குள் நுழைந்திருக்கலாம்.

அல்லது வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆட்டுத் தீவனங்கள் மற்றும் சில தானிய வகைகளுடன் கலந்தே இவை இலங்கையின் ஏனைய பகுதிகளுக்குப் பரவியிருக்கலாம். இப்படி இருவேறு ஊகங்கள் நிலவுகின்றன.

இன்று யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மற்றும் அநுராதபுரம் போன்ற மாவட்டங்களில் பாதீனியம் ஒரு கட்டுப்பாடற்ற ஆக்கிரமிப்புத் தாவரமாக உருவெடுத்துள்ளது.

பாதீனியம் என்பது வெறும் செடி மட்டுமல்ல, அது ஒரு நச்சுத் தொழிற்சாலை. இதன் பாதிப்புகளை மூன்று நிலைகளில் பிரிக்கலாம்:

**1. மனித ஆரோக்கியம்:**

பாத்தீனியத்தில் உள்ள 'பார்த்தீனின்' (PARTHENIN) என்ற நச்சுப்பொருள் காற்றில் கலக்கும்போது, சுவாசக் கோளாறுகளை (ஆஸ்துமா) ஏற்படுத்துகிறது. இதனைத் தொடுவதால் கடுமையான தோல் அரிப்பு, முகம் வீங்குதல் மற்றும் ஒவ்வாமை போன்றவை ஏற்படும்.

> "பூக்கத் தொடங்கும் முன்பே பிடுங்கி எறி இல்லையேல் உன் நிலம் உனக்குச் சொந்தமில்லை."

**2. விவசாயம் மற்றும் பொருளாதாரம்:**

இது ஒரு 'அலிலோபதி' (ALLELOPATHY) தாவரமாகும். அதாவது, இது தன் வேர்கள் மற்றும் இலைகள் வழியாக ஒரு வேதிப்பொருளைச் சுரந்து, அருகில் வளரும் ஏனைய பயிர்களின் வளர்ச்சியைத் தடுத்துவிடும். இதனால் சோளம், வெங்காயம் மற்றும் பருப்பு வகைகளின் அறுவடை 40% = 50% வரை குறைய வாய்ப்புள்ளது.

**3.கால்நடைப் பாதிப்பு:**

கால்நடைகள் இச்செடியை மேய்ந்தால் அவற்றின் வாயில் புண்கள் ஏற்படுவதுடன், பால் கசப்புத் தன்மையை அடையும். சில நேரங்களில் இது கால்நடைகளின் உயிரிழப்புக்கும் காரணமாகிறது. அழிக்கும் முறைகள்: ஒரு கூட்டு நடவடிக்கை ஆராய்ச்சி அடிப்படையில் பாத்தீனியத்தை அழிக்கப் பின்வரும் மூன்று வழிமுறைகள் பரிந்துரைக்கப்படுகின்றன:

**1. உயிரியல் முறை நிரந்தரத் தீர்வு**

இலங்கை விவசாயத் திணைக்களம் தற்போது சைகோகிராமா பைகோலரேட்டா எனப்படும் மெக்சிகன் வண்டுகளைப் பயன்படுத்துகிறது. இந்த வண்டுகள் பாத்தீனிய இலைகளை மட்டும் உண்டு, செடியைப் பூக்க விடாமல் தடுத்து இயற்கையாகவே அழிக்கும்.

**2. தாவரப் போட்டி முறை**

பாதீனியம் வளரும் இடங்களில் சாமந்தி அல்லது துத்தி போன்ற செடிகளை வளர்ப்பதன் மூலம் அதன் ஆக்கிரமிப்பை இயற்கையாகத் தடுக்கலாம்.

**3. இயந்திர மற்றும் வேதியியல் முறை**

உப்பு நீர் சிகிச்சை: 20% அடர்த்தியுள்ள சாதாரண உப்புக் கரைசலை (1 லீற்றர் நீரில் 200 கிராம் உப்பு) பூக்கும் முன்பே தெளிப்பதன் மூலம் செடிகளைப் பொசுக்கலாம்.

அண்மைக் காலங்களில் பாதீனியம் செடியை களைந்து கொண்டு வந்து தருபவர்களுக்கு 1கிலோவுக்கு 200 ரூபா வீதம் வழங்கப்படும் என சில அறிவிப்புகள் வெளியாகியிருந்தன. இதன் மூலம் பாத்தீனியத்தை சிலர் ஏன் வளர்த்து விற்கக் கூடாது என்று தவறாக எண்ணினால், நிலைமை நேரெதிராக மாறிவிடும். எனவே பாதீனியம் வீடுகளில் அல்லது காணிகளில் இருந்தால் தண்டப்பணம் அறவிடப்படும் என அறிவித்தால் பாதீனியம் முற்றுமுழுதாக அழிக்கப்படாவிடினும் அது இழிவளவாக்கப்படும்

பாதீனிய ஒழிப்பு என்பது ஒரு தனிநபரின் வேலையல்ல. ஒரு பாதீனியம் தனது வாழ்நாளில் 25,000க்கும் மேற்பட்ட விதைகளை உற்பத்தி செய்யும் திறன் கொண்டது. எனவே, வீதியோரங்களிலும் விளைநிலங்களிலும் இந்தச்செடியைக் கண்டால், தகுந்த பாதுகாப்பு அங்கிகளை (கையுறைகள், முகக்கவசம்) அணிந்து அவற்றை வேரோடு பிடுங்கி அழிப்பதன் மூலமே இலங்கையின் எதிர்கால விவசாயத்தைக் காப்பாற்ற முடியும்.


# எங்கள் ஊர்ப்பெயர்கள்: தமிழிலும் ஆங்கிலத்திலும் ஏன் வேறுபாடு?




ஒரு மனிதனுக்கு அவனது பெற்றோரிட்ட பெயரை அவனது சொந்த மொழியில் எழுதும் போது அந்த மொழியின் வரிவடிவத்தில் அமைவுறும். ஏனைய மொழிகளில் எழுதும் போது அந்தந்த மொழிகளின் வரிவடிவிலேயே எழுதப்படும். ஆனால் ஒலிவடிவம் சொந்த மொழியாயினும் வேறு எந்த மொழியாயினும் மாறுபடாது. இது அனைவருக்கும் பொதுவான விடயமாகும். இது இடப்பெயருக்கும் பொருந்தும். ஆனால் ஆங்கிலேயர் ஆட்சியின் இந்திய= இலங்கைத் தேசங்களில் அவர்கள் சென்னையை 'மெட்ராஸ்' என்றும், இலங்கையை 'சிலோன்' என்றும், பருத்தித்துறையை 'பொயின்ற் பெற்றோ' என்றும் பெயரிட்டு அழைத்தார்கள். ஆனால் இன்று மட்ராஸ் 'சென்னை' என தனித்தமிழில் சொந்த மொழியில் மொழிப்பெயரில் அழைக்கப்படுகின்றது; எழுதப்படுகின்றது. அதுபோன்று நமது நாட்டின் பெயரும் இன்று சிங்களப் பெயரான 'சிறிலங்கா' என்றே வழக்கில் உள்ளது. தமிழிலோ ஆங்கிலத்திலோ நாங்கள் சிலோன் என்று எழுதுவதில்லை; பேசுவதில்லை. ஆனால் நமது தமிழ் நகரங்களின் பெயர்கள் இன்னும் அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுபடவில்லை. யாழ்ப்பாணத்தை ஆங்கிலத்தில் 'யவ்னா' என்றே எழுதுகின்றோம். அதேபோன்று பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு என்று தமிழில் சொன்னாலும் கூட, 'பொயின்ற் பிற்றோ', 'கைற்ஸ்', 'டெல்வ்ற்' என்றே ஆங்கிலத்தில் எழுதுகின்றோம். ஏனிப்படி தமிழில் ஒரு பெயரும், ஆங்கிலத்தில் இன்னொரு பெயருமாக அல்லாடுகிறோம். ஒரு இடத்தின் பெயரை எல்லாமொழிகளிலும் ஒரேமாதிரியாக அழைப்பதும், எழுதுவதும் எம்மிடையே ஏன் இல்லாமல் போனது? இந்த மொழியியல் மாற்றம் அவசியமானது. தமிழ்ப் பேரறிஞர்களுக்கு இவ்விடயம் சமர்ப்பணம்.

ஆனையூர்க்கவிராயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# ஈக்களைக் கட்டுப்படுத்தலும் உணவுப் பாதுகாப்பும்!

ஆ. ஜென்சன் றொனால்ட், ஆளுஉ
மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்

உணவு என்பது ஒவ்வொரு மனிதனின் உயிருடன் நேரடியாகத் தொடர்புடைய அத்தியாவசிய அம்சமாகும். ஒரு மனிதன் தினசரி வாழ்வில் உடல் சக்தியைப் பெறவும், வளர்ச்சியை அடையவும், நோய்களை எதிர்கொள்ளவும் உணவு அவசியமானது. எனவே உணவு வெறும் போசனைச்சத்துகள் நிறைந்ததாக இருப்பது மட்டுமன்றி, அது பாதுகாப்பானதாகவும், நோய்களை ஏற்படுத்தாததாகவும் இருக்கவேண்டும்.

இன்றைய சமூக அமைப்பில், மக்கள் தங்கள் வாழ்க்கை முறையின் காரணமாக வீடுகளுக்கு வெளியே உணவருந்தும் நிலை அதிகரித்துள்ளது. வேலைப்பளு, நகர்ப்புற வாழ்க்கை, நேரமின்மை போன்ற காரணிகள் மக்கள் உணவகங்களை நாட வேண்டிய நிலையை உருவாக்கியுள்ளது. இதனால் உணவகங்கள், சிறிய பெட்டிக்கடைகள் முதல் பெரிய நட்சத்திர ஹோட்டல்கள் வரை, சமூகத்தில் பரவலாக உருவாகிவருகின்றன.

ஆனால் இந்த வளர்ச்சியுடன் இணைந்து பல சவால்களும் எழுகின்றன. குறிப்பாக உணவுச் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு இல்லாமை, கட்டுப்பாடுகள் இல்லாமை, மற்றும் சட்டங்களை முழுமையாக அமுல்படுத்துவதில் ஏற்படும் சிரமங்கள் ஆகியவை பொதுமக்களின் ஆரோக்கியத்திற்கு ஆபத்தை ஏற்படுத்துகின்றன.

### சமூக மற்றும் நிர்வாகச் சவால்கள்

உணவகங்கள் பல்வேறு அழகான பெயர்களில் இயங்கினாலும், அவற்றில் பல அடிப்படைச் சுகாதார வசதிகள் இன்றி செயற்படுகின்றன. சில உணவகங்கள் கட்ட அனுமதிகள் இன்றி தொடங்கப்படுகின்றன் சிலவற்றில் சுத்தம், கழிவுநீர் முகாமைத்துவம், மற்றும் உணவுப் பாதுகாப்பு முறைகள் பின்பற்றப்படுவதில்லை. சுகாதார அதிகாரிகள் சட்டநடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது, சமூகத்தில் பலவிதமான எதிர்ப்புகள் எழுகின்றன.
"இது எங்கள் வாழ்வாதாரம்"என உரிமையாளர்கள் வலியுறுத்துகின்றனர்.

"ஏழைகளின் வாழ்வைப் பாதிக்கின்றீர்கள்" எனச் சிலர் குற்றஞ்சாட்டுகின்றனர். ஆனால் அதே மக்கள், உணவகங்களில் சுகாதாரக் குறைபாடு கள் ஏற்பட்டால், உடனடியாக குறை கூறுகின்றனர். இந்த முரண்பாடான அணுகுமுறை உணவுச் சுகாதார மேம்பாட்டைச் சிரமப்படுத்துகிறது. நுகர்வோர் தாங்கள் எதிர்கொள்ளும் சுகாதாரக் குறைபாடுகள் குறித்து அந்த நேரத்திலேயே உரிமையாளருக்கு சுட்டிக்காட்டுவதோடு அவ்வாறு நடந்துகொள்ளும் உணவகங்களை நாடுவதைத் தவிர்க்கவும் வேண்டும்.

### சட்ட அடிப்படை

இலங்கையில் உணவுச் சுகாதாரத்தை கட்டுப்படுத்த முக்கியமாக 1980 ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க உணவுச்சட்டம், அதனுடன் தொடர்புடைய ஒழுங்குவிதிகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் விதிமுறைகள் அமுலில் உள்ளன.
இந்த சட்டங்களை முழுமையாக அமல்படுத்துவதில், சமூக விழிப்புணர்வு குறைவு, தொழில்நுட்ப அறிவின்மை, அரசியல் மற்றும் சமூக அழுத்தங்கள் போன்றவை தடையாக இருக்கின்றன. எனினும், எந்த அளவிலான உணவகமாக இருந்தாலும்- சிறிய கடை அல்லது பெரிய ஹோட்டல்- அவை சட்டப்படி சுகாதார விதிமுறைகளை கடைப்பிடிக்கவேண்டும் என்பது மறுக்க முடியாத உண்மை.

### ஈக்கள் - பாரதூரமான சுகாதார அபாயம்

உணவுச் சுகாதாரத்தில் மிகவும் கவலைக்கிடமான ஒன்று ஈக்கள் ஆகும். ஈக்கள்-கழிவுகள், மலசலம், அழுகிய பொருள்கள் மீது அமர்கின்றன. நோய்க்கிருமிகளை உடலில் தாங்கிவருகின்றன. பின்னர் உணவின் மேல் அமர்ந்து அதனை மாசுபடுத்துகின்றன இதன் மூலம், வயிற்றுப்போக்கு, நெருப்புக்காய்ச்சல் , அமீபாத் தொற்றுகள், உணவு நஞ்சாதல் போன்ற நோய்கள் பரவக்காரணமாகின்றன.
மேலும், ஈக்கள் உணவில் முட்டைகள் இடுவதன் மூலம் புழுக்கள் உருவாகும் அபாயமும் உள்ளது. இது உணவுப் பாதுகாப்பை முற்றிலும் பாதிக்கும் மிக மோசமான நிலையாகும். சாதாரண நிலையில் ஈக்கள் உணவுப்பொருளில் முட்டையிட்டு எட்டு மணித்தியாலங்களில் குடம்பிகளாகிய புழுக்கள் உருவாகத்தொடங்கிவிடும். இது வெப்பமான சூழல்நிபந்தனைகளில் சில மணித்தியாலங்களிலேயே உருவாகலாம்.


உணவுப்பொருள்களின் மீது ஈக்கள் உட்காரும் போதெல்லாம் உணவைக் கிருமிகளால் மாசுபடுத்துவது மட்டுமன்றி அதில் தனது முட்டைகளையும் இட்டுவிடுகின்றன. இவை உணவில் புழுக்கள்தோன்றக் காரணமாகின்றன.
ஒருங்கிணைந்த'ஈக் கட்டுப்பாடு

ஈக்களைக் கட்டுப்படுத்த ஒரே ஒரு முறையை பயன்படுத்துவது போதுமானதல்ல. பல்வேறு முறைகளை ஒருங்கிணைத்துப் பயன்படுத்தவேண்டும்.

#### 1. சுற்றுப்புறச் சுத்தம்

சுற்றுப்புற சுத்தம் என்பது ஈக் கட்டுப்பாட்டின் அடிப்படை. உணவுத் தயாரிப்பு பகுதிகள் தினமும் சுத்தம் செய்யப்படவேண்டும். உணவுக் கழிவுகள் உடனடியாக அகற்றப்படவேண்டும். தரை, மேசை, சுவர்கள் சுத்தமாக பராமரிக்கப்படவேண்டும். கழிவுநீர் வடிகால்கள் அடைப்பு இல்லாமலும் கழிவுநீர்சேகரிப்புத் தொட்டிகள் வெடிப்புகளின்றியும் இருக்கவேண்டும். சுத்தமில்லாத சூழல் ஈக்கள் இனப்பெருக்கத்திற்கு சிறந்த இடமாக மாறுகிறது. குறிப்பாக உணவுத்துணிக்கைகளுடைய ஈரலிப்பான கழிவுகள் சேருமிடங்கள், அழுகும் குப்பைசூழங்கள், விலங்குகள் பறவைகளின் கழிவுகள் என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

#### 2. பௌதீகத் தடுப்பு முறைகள்



ஈக்கள் உணவகத்திற்குள் நுழையாமல் தடுப்பதே முக்கியம். ஜன்னல்கள் மற்றும் கதவுகளில் ஈ புகாதடுக்கும் வலைகளைப் பொருத்துதல். தானாக மூடும் கதவுகளை ஒவ்வொரு பிரிவுகளின் நுழைவு மற்றும் வெளியேறுமிடங்களிலும் பயன்படுத்துதல். கருவிமூலம் வாசல்களுக்கு குறுக்காக வேகமான காற்று விசிறலை ஏற்படுத்துதல். எந்த இடத்திலும் திறந்தவாசல் நிலையைத் தவிர்த்தல். இவை ஈக்கள் நுழைவதைப் பெரிதும் குறைக்கும்.

#### 3. ஈ பிடிப்பு சாதனங்கள்

ஈக்களைப் பிடிக்கவும் அழிக்கவும் சாதனங்கள் உதவுகின்றன: களியூதாதா கதிர் வெளிச்சத்தினால் (ருஏ டாபாவ வசயிள) கவர்ந்தழித்தல், மின்சார அதிர்ச்சியினால் அழித்தல்(நுடநஉவசர்உ கடல மடைடநசள), ஒட்டுந்தன்மையான பொறிகளை பயன்படுத்துதல்(ளுவர் உமல வசயிள). ஆனால் இவை சரியான இடத்தில் அமைக்கப்பட வேண்டும். உணவின் மேல் நேரடியாக அமைக்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டும்.

#### 4. இரசாயனக் கட்டுப்பாடு

சில சந்தர்ப்பங்களில் இரசாயன முறைகள் தேவைப்படும்: அனுமதிக்கப்பட்ட பூச்சி கொல்லிகளை (ிளெந உவஉனைநள) மட்டும் பயன்படுத்த வேண்டும். உணவுப் பகுதிகளில் நேரடி தெளிப்பு தவிர்க்கப்பட வேண்டும். இது தேர்ச்சி பெற்றவர்களாலே மட்டுமே செய்யப்பட வேண்டும். இது தவறாக பயன்படுத்தப்பட்டால், உணவுக்கே ஆபத்து ஏற்படும்.

#### 5. கழிவு மேலாண்மை

கழிவுகள் ஈக்களின் முக்கியமான இனப்பெருக்க இடமாகும். குப்பை தினசரி அகற்றப்பட வேண்டும். அகற்றப்படும் உணவுக்கழிவுகள் குழிதோண்டிப் புதைத்து அதன்மேல் ஒன்பது அங்குலத்துக்கு மண் இடப்படவேண்டும். மூடியுள்ள குப்பைத் தொட்டிகள் பயன்படுத்தப்படவேண்டும்.

(மிகுதி அடுத்த வாரம்)....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மகசின் சிறையில் கைதி உயிரிழப்பு

## அதிகாரிகள் கைது!

கொழும்பு, ஏப்.29

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் கைதியொருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் ஜெயிலர் ஒருவரும் பெண் பாதுகாவலர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டு கைதிகள் சிறை அறைகளைவிட்டு வெளியேறி தப்பிச் செல்ல முற்பட்டபோது அதனைத் தடுக்க சிறைக் காவலர் ஒருவர் முயற்சித்துள்ளார்.

இதன்போது இரு கைதிகளும் சிறை அதிகாரி ஒருவரும் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களுள் ஒரு கைதி சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். போதைப்பொருள் குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 38 வயதான கைதியே இவ்வாறு உயிரிழந்தவராவார். சம்பவம் தொடர்பாக பொரளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

## அளவீட்டு...

தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை, அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கும் நோக்குடன் நேற்றையதினம் அளவீடு இடம்பெறும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பான அனைத்துப் பணிகளும் தொடர்புடைய சகல திணைக்களங்களின் பங்குபற்றலுடன் நேற்று முன்னெடுக்கப்பட்டன. எனினும், சுவீகரிக்கப்படும் நோக்குடன்தான் காணிகள் அளவீடு செய்யப்படுகின்றன என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் சந்தேகம் வெளியிட்டமையால் காணிகளின் உரிமையாளர்கள் தமக்கு ஓர் உத்தரவாதக் கடிதம் தரப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

'காணிகளை அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கும் நோக்கில் இந்த அளவீட்டுப் பணிகள் இடம்பெறுகின்றன' என்றவாறான உத்தரவாதத்தைக் கோரியபோதிலும், 'அமைச்சுமட்டக் கலந்துரையாடலின் பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்' என்ற சொற்றொடரைப் பயன்படுத்தியே அந்த உத்தரவாதக் கடிதம் வழங்கப்பட்டது.

இதற்கு காணிகளின் உரிமையாளர்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தனர். காணிகளை உரிமையாளர்களிடம் ஒப்படைக்கும் நோக்குடன் அளவீடு செய்யப்படுகின்றது என்ற வலுவான உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும் என்று காணிகளின் உரிமையாளர்கள் வலியுறுத்தியதற்கு அமைய, தொடர்புடைய திணைக்களங்களின் பிரதானிகள் அத்தகைய கடிதமொன்றை எழுதிக்கையொப்பமிட்டுக் கையளித்தனர்.

எனினும், அந்தக் கடிதத்தையும் காணிகளின் உரிமையாளர்கள் ஏற்கவில்லை. கடிதத்தலைப்பில் (லெட்டர் ஹெட்) தமக்கான கடிதம் கையளிக்கப்பட வேண்டும் என்று காணிகளின் உரிமையாளர்கள் மீள வலியுறுத்தினார்கள். ஆனால் அதிகாரிகள் வெவ்வேறு திணைக்களங்களைச் சேர்ந்தவர்கள். எனவே, பொதுவான ஒரு கடிதத்தலைப்பில் அத்தகைய கடிதத்தைக் கையளிக்க முடியாது. இந்த விடயத்தை அதிகாரிகள் கூறிய போது, காணி உரிமையாளர்கள் அளவீட்டுப் பணிகளுக்கு மறுத்தனர். இதையடுத்து, காணி அளவீடு கைவிடப்பட்டது.

காணிகளை அளவீடு செய்வதற்காக இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை, திஸ்ஸ விகாராதிபதியின் எதிர்ப்பால் கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## இசையால்...

செல்லப்பா, தாயகம் தொடர்பான எழுச்சிப் பாடல்களுக்காக ஈழத்தமிழர்களிடத்தில் பரவலாக அறியப்பட்டார். 1980ஆம் ஆண்டிலிருந்து எழுச்சிப் பாடல்களைப் பாடிவந்த அவர், 1990 ஆம் ஆண்டு ஈழத்துக்கு அழைக்கப்பட்டார். யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் நடந்த முத்தமிழ் விழாவில் அவரது கச்சேரி நடைபெற்றது. லட்சக்கணக்கான மக்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து வடக்கு கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் அவரது கச்சேரி சிறப்பாக நடைபெற்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனையும் இவர் நேரில் சந்தித்துள்ளார்.

கவிஞர் காசி ஆனந்தன், கவிஞர் புதுவை இரத்தினதுரை மற்றும் பல கவிஞர்கள் எழுதிய பல பாடல்களைப் பாடிய தேனிசை செல்லப்பா ஈழத்தில் ஆயுதப் போராட்டம் ஓயும்வரை விடுதலைப் பாடல்களைத் தொடர்ச்சியாகப் பாடி வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

## போதை...

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், சுன்னாகம் பொலிஸாரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-27)

## செம்மணிப்...

டாம் நாள் அகழ்வுப் பணிகள் நேற்று இடம்பெற்றன. இன்றையதினம் அகழ்வுப் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவுள்ளன.

பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினர் அகழ்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். நீதவான் எஸ்.லெனின்குமார் அகழ்வுப் பணிகளைக் கண்காணித்து வருகின்றார். காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பில் சட்டத்தரணி ரணித்தா, சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன் தலைமையிலான குழுவினர் ஆகியோர் அகழ்வுப் பணிகளின் போது முன்னிலையாகி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## சிறுவர்...

செவ்வாய்க்கிழமை தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

மருத்துவர் தயா சோமசுந்தரத்தால் பிரதேச சிறுவர்களின் நலன் கருதிக் குறித்த நிறுவனம் நடத்தப்பட்டு வருகின்றது. இதில் முன்பள்ளிச் சிறுவர்கள் தொடக்கம் தரம் 11 வரையான 90 இற்கும் அதிகமான மாணவர்கள் கற்றல், விளையாட்டு மற்றும் இதர செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தனர். இந்த நிலையில் இந்தச் சிறுவர் ஆற்றல் மையம் எரியுண்டமையால் அங்கு கற்கும் மாணவர்களுடன் அந்தப் பகுதி மக்களும் பெரும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. தபோவனம் சிறுவர் ஆற்றல் மையத்துக்கு விஷமிகளால் தீ வைக்கப்பட்டதா? அல்லது மின் ஒழுக்கால் இந்த அசம்பாவிதம் ஏற்பட்டதா? என்பது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-23-66)

## ரயிலுடன்...

தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற கடுகதி ரயிலுடனே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் தகவல் வழங்கப்பட்டதும் அந்தப் பகுதிக்குச் சென்ற பொலிஸார் முதியவரின் சடலத்தை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர்.

வவுனியா - தாண்டிக்குளம் பகுதியில் அண்மையில் ரயிலுடன் ஓட்டோ மோதியதில் இருவர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-110)

## கோத்தாபயவின்...

மாதம் 2ஆம் திகதி வழங்கப்படும் என்று நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது.

2011ஆம் ஆண்டு மனித உரிமைகள் தினமான டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான போராட்டத்தை ஒழுங்கமைப்பதில் ஈடுபட்டிருந்த லலித்குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் காணாமல் ஆக்கப்பட்டனர். இது தொடர்பான வழக்கில், கடந்த 2017ஆம் ஆண்டு முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவின் பெயர் இணைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணைகளின்போது, கோத்தாபய ராஜபக்சவை மன்றில் தோன்றி சாட்சியமளிக்குமாறு உத்தரவிடப்பட்டது. எனினும், பாதுகாப்புக் காரணங்களுக்காக தன்னால் யாழ்ப்பாணம் செல்லமுடியாது என்று கோத்தாபய ராஜபக்ச கூறியிருந்தார்.

சாட்சியம் வழங்குவதற்காக யாழ்ப்பாணத்துக்கு வரமுடியாது என்றால், அது தொடர்பில் சத்தியக் கடதாசியும், எழுத்துமூல சமர்ப்பணமும் வழங்குமாறு நீதிமன்றம் அறிவுறுத்தல் வழங்கியது. அவை கோத்தாபய தரப்பால் வழங்கப்பட்டுள்ளன. இதையடுத்தே, காணாமல் ஆக்கப்பட்ட லலித் மற்றும் குகன் ஆகியோர் தொடர்பான வழக்கில், கோத்தாபய ராஜபக்சவின் சாட்சியத்தை எத்தகைய முறையில் பெறுவது என்பது தொடர்பான கட்டளையை நீதிமன்றம் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## திஸ்ஸ...

கள் திஸ்ஸ விகாராதிபதியின் எதிர்ப்பால் கைவிடப்பட்ட நிலையில், நேற்று ஏராளமான பிக்குகள் குவிந்திருந்தமை பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்தியது. இதேவேளை, காணி அளவீட்டுப்பணிக்காகவந்த காணிஉரிமையாளர்களின் விவரங்களை பொலிஸார் பதிவேடு ஒன்றில் பதிவுசெய்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## போத்தலில்...

ரத்தைப் பாதுகாக்கும் நோக்கில் மன்னார்நகரசபையில் மதுவரித் திணைக்கள அதிகாரிகள், மன்னார் பொதுச்சுகாதார மருத்துவ அதிகாரி, கள் உற்பத்தியாளர்கள் மற்றும் மதுக்கடை உரிமையாளர்களுக்கு இடையிலான கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது.

இதன்போது, தமது வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் நோக்கில் போத்தலில் அடைக்கப்பட்ட கள் விற்பனையைக் கட்டுப்படுத்துமாறு உள்ளூர் விற்பனையாளர்கள் கோரிக்கை விடுத்தனர். இது தொடர்பில் நீண்ட கலந்துரையாடல்கள் இடம்பெற்ற நிலையில், இறுதியில் போத்தலில் அடைக்கப்பட்ட கள் விற்பனைக்கு நேரக்கட்டுப்பாட்டை விதிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. இதன்படி, தினமும் காலை 10 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை போத்தலில் அடைக்கப்பட்ட கள் விற்பனையைத் தற்காலிகமாக நிறுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ம-56)

## நாச்சிமார்...

னர். கடந்த 25 வருடங்களாக அந்த ஆலயத்தில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் முன்னறிவிப்பு எதையும் வெளியிடாமல் அங்கிருந்து வெளியேறிச் சென்றுள்ளனர். இதையடுத்து, அந்த ஆலயத்தில் பொதுமக்கள் வழிபாடுகளில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர். ஆலய வளாகத்திலிருந்த சில கட்டடங்கள் இராணுவத்தால் அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தையின் நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்வீர்கள். எதிர்காலத்துக்குப் பயன் தரும்வகையில் முக்கியமான பிரமுகர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**இடபம்:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாகமுடியும். உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். சிலருக்கு வீண் அலைச்சல் ஏற்படவும் அதனால் உடல் அசதி உண்டாகவும் கூடும்.

**கடகம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாகமுடியும். வாழ்க்கைத்துணையின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். சகோதரர்களால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும்.

**சிம்மம்:** தாய்வழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புக்கொடுப்பார்கள். அவர்மூலம் உங்களுக்குத் தேவையான உதவிகளும் கிடைக்கும்.

**கன்னி:** சகோதரர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மாலையில் உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படக்கூடும். புதிய டிசைனில் ஆடைகள் வாங்கி மகிழ்வீர்கள்.

**துலாம்:** திடீர் செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** மனதில் இனந்தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணைவழியில் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. பிள்ளைகள் வழியில் எதிர்பார்த்த சுபச்செய்தி கிடைக்கக்கூடும்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். தந்தைவழியில் ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும்.

**மகரம்:** சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு ஏற்படும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடவேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்குக் குடும்பம் தொடர்பான பணிகளுக்காக வெளியூர்ப்பயணம் மேற்கொள்ள நேரிடும்.

**மீனம்:** மகிழ்ச்சியான நாள். மன உறுதியுடன் செயற்படுவீர்கள். எதிர்பாராத பணலாபம் உண்டாகும். கடன்களில் ஒரு பகுதியைத் தந்து முடிக்கும் வாய்ப்பு ஏற்படும்.

# ஆயுள்வேத மருந்தகங்களின்றி தென்மராட்சியில் மக்கள் சிரமம்

**தென்மராட்சி, ஏப்.29**

**தென்மராட்சி பிரதேசத்தில் நீண்டகாலமாக தினமும் இயங்கிவந்த ஆயுள்வேத மருந்தகங்களும் ஆயுள்வேத மத்திய மருந்தகமும் மூடப்பட்டுள்ளதால் அவற்றில் சிகிச்சை பெற்றுவந்த நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.**

தென்மராட்சிப் பகுதியில், மாகாண ஆயுர்வேதத் திணைக்களத்தின்கீழ் பல ஆண்டுகளாகச் செயற்பட்டு வந்த சாவகச்சேரி ஆயுர்வேத மத்திய மருந்தகம், சரசாலை மருந்தகம், உள்ளூராட்சித் திணைக்களத்தின் கீழ் சாவகச்சேரிப் பிரதேசசபைக்கு உட்பட்ட கச்சாய் மற்றும் வரணி இலவச ஆயுள்வேத மருந்தகங்கள் என்பன தற்போது மூடப்பட்டுள்ளன.


இந்த மருந்தகங்கள் மூடப்பட்டுள்ளதால், அந்தந்த கிராமங்களில் வசிக்கும் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். இது தொடர்பில் தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தினர் உரிய திணைக்களங்களின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ள நிலையில் மூடப்பட்டுள்ள ஆயுள்வேத மத்திய மருந்தகம் மற்றும் ஆயுர்வேத மருந்தகங்களை மாதத்தில் ஒரு நாள் நடத்த மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-9)

# ஓய்வூதிய சங்கத்துக்கு புதிய நிர்வாகிகள் தெரிவு

மன்னார், ஏப்.29

மன்னார் மாவட்ட ஓய்வூதியம் பெறுவோர் சங்கத்தின் 38ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில், புதிய நிர்வாகத்தெரிவும் இடம் பெற்றது. மன்னார் நகரசபை மண்டபத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற கூட்டத்தில், ஆயிரத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட சங்கத்தின், நடப்பு வருடத்துக்கான செயற்குழு நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டது. இதில் தலைவராக எஸ்.சூசைதாசன், செயலாளராக ஈ.ஜி.ஜே.மிராண்டா, பொருளாளராக ஏ.பிரான்சிஸ், உபதலைவராக ஏ.ஏ.செசாறியோ குரூஸ், உப செயலாளராக ஜே.பி.றொட்றிக்கோ ஆகியோருடன், செயற்குழு அங்கத்தவர்களாக ஏ.சாந்தர்குமார், எம்.நீக்கிலான், எஸ்.செபஸ்ரியன், ஜி.றெஜினோல்ட், திருமதி.ஆர்.மதலேனாள், சீ.எம்.பெர்னாண்டோ, ரி.ஜெகநாதன், திருமதி.ஜே.எஸ்.எல்.அருளானந்தம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (க-60)

# பஞ்சாப்புக்கு நேற்று முதலாவது தோல்வி



**ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், பஞ்சாப்பை கடும் போராட்டத்துக்கு மத்தியில் வீழ்த்தியது ராஜஸ்தான்.**




இந்தத் தொடரில் இது வரை தோல்வியடையாத அணி என்ற பெருமையுடன் வலம்வந்த பஞ்சாப் அணியின் வெற்றிநடைக்கு நேற்று முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ராஜஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 222 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஸ்ரொய்னிஸ் 62 ஓட்டங்களையும், பிரப்சிம்ரன் சிங் 59 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குக் களமிறங்கிய ராஜஸ்தான் அணிக்கு சூரியவன்சி 16 பந்துகளில் 43 ஓட்டங்களைக் குவித்து வலுவான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தார். ஜுரல் சற்றுத் தடுமாறினாலும், ஏனைய வீரர்கள் அபார ஆட்டத்தை வெளிப்படுத்த அந்த அணி 19.2 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து வெற்றிபெற்றது. (ம)


# காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி சந்தியில் பிரதான வீதியில் 50 நிலபரப்புக் காணி விற்பனைக்கு உண்டு

- யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை பிரதான காப்பற் வீதி முகப்புடன் மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் ஒரு பரப்பு **1,200,000/=** (பன்னீரெண்டு) இலட்சம்
- 16 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகவும், ஒன்றரை பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- நடுப்பகுதி ஒரு பரப்பு எட்டு இலட்சம் ரூபாய், பின் பின் பகுதி ஒரு பரப்பின் விலை ஆறு இலட்சம் ரூபாய்.
- யாழ் நகரிலிருந்து **4 km** தூரம்
- வீடுகள் அமைப்பதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் சிறந்த இடம்.

தொடர்பு:- 076 99 03 039
076 98 78 617

(CS 31702) A




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.04.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.